1876-ம் வருஷம்
ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

78-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1953-ம் ஆண்டு ஆவணிமாதம் 20-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 32-ம் இலக்கம்

## அர்ச். பேணாட் பரமபதம் அடைந்த எட்டாம் நூற்றாண்டு விழா

நிகழும் ஆவணிமாசம் 20-ந் திகதியாகிய இன்றையதினம், அர்ச். பேணாட் முனீந்திரன் பரலோக பிராப்தியான எட்டாம் நூற்றாண்டு பூர்த்தியாகிறது. இந்தப் பரிசுத்தமுனிவரைக் காவலன் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கமாக இச்சிறு கட்டுரையை வரைகின்றோம். பிரான்ஸ் தேசத்தின் எல்லையிலுள்ள பேர்கண்டிப் பிரபுவின் ஆட்சிக்குள் அடங்கிய 'வொன்ரெயின்ஸ் என்னும்ஊரில் 1090-ம் ஆண்டு பேணாட் பிறந்தார். இவர்தந்தையார் சீரியகுணமும், தேவபயமும்உள்ள ரெஸ்லின் என்னும் பெயர் பெற்ற யுத்தவீரர். இவர் தாயார் சகலபுண்ணியங்களும் நிரம்பிய அலிஸ் என்னும் சீமாட்டி. இந்தப் பரிசுத்தகுடும்பத்தில் ஆறு புதல்வரும், ஒரு புதல்வியும் உதித்தனர். மூன்றாவது பிள்ளையாகிய பேணாட் மற்றவர்களிலும் அதிகமாகத் தமதுதாயாரால் நேசிக்கப்பெற்று, அவர்தேவனை அதிகமாக நேசிக்கும்படி செய்து வளர்க்கப்பட்டுவந்தார். இந்த உத்தம குடும்பமானது சகலருக்கும் ஓர் மேல்வரிச்சட்டமாய் விளங்கும் படியாகத் தேவனால் மிகவும் விசேஷ விதமாய் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. இவர்கள் எல்லோருக்கும் சிறந்த ஞான அஸ்திவாரமிட்டவள், அலிஸ்சீமாட்டியே. இவள் தனது நன்னடத்தையாலும், முன் மாதிரிகையாலும் எல்லாப் பிள்ளைகளையும் தேவநேசத்திலும், சன்மார்க்கத்திலும் வளர்த்துவந்தாள். இவள் உதவியைக் கொண்டே பேணாட் துறவற அந்தஸ்தைத் தெரிந்து கொண்டார்.



அர்ச். பேணாட்



தேவதாயார் அர்ச். பேணாட்டுக்குக் காட்சியளிக்கின்றார்
(பிரு பிலிப்போ லிப்பிஎன்பவர் எழுதிய சித்திரத்தின் பிரதிமைப்படம்)

அந்தக்காலத்திலே புதிதாகத்திருத்தி அமைக்கப்பெற்ற தாய்க் கடுந்தபசுபுரியும் "சிஸ்ரேசியன்" ஆசிர்வாதப்பர் சபையையே இவர் தமதுகுறிக்கோளாகத் தெரிந்துகொண்டு, தம்முடைய ஐந்து சகோதரர்களையும், அநேகபிரபுக்களையும், உயர்குலவீரர்களையும் சேர்த்துக்கொண்டு, 'சீற்றோ' என்னும் ஆச்சிரமஞ்சென்றார். அங்கே நவசந்நியாசம் முடிந்ததும் இவர்கள்எல்லோரும் 27 வயது இன்னுமே நிரம்பாத இளம்பேணாட்டின் தலைமையிலே புதிதாகஸ்தாபிக்கப்பட்ட "கிளாயுவோ" என்னும் ஆச்சிரமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். பேணாட்டின் தந்தையாரும் இந்தமடத்தில் தமதுவாழ்க்கையின் கடைசியான இருவருடங்களையும் ஓர் உதவிச் சந்நியாசியாக மிகவும் உத்தமவிதமாய்ச் செலவிட்டுப் பாக்கியமான மரணமடைந்தார். இவருடைய ஏக சகோதரியும் சிலவருடகாலம் இல்லறவாழ்க்கை நடாத்தியபின் தனதுகணவர் மனமுவந்தளித்த நல்லனுமதியுடன் துறவறவாழ்க்கையை மேற்கொண்டு ஓர் உத்தம கன்னியாஸ்திரியாகச்சீவித்து மரித்தாள். இவர்கள் துறவிகளாகித் திருச்சபையில் அர்ச்சியசிஷ்டர்களாகவும், முத்திப்பேறு பெற்றவர்களாகவும் சங்கிக்கப்பெற்று வருகின்றார்கள். இவர்கள் ஒவ்வொருவரையும்பற்றித் தனித்தனியே எழுத அநேககாண்டங்களாகும். தமது தந்தையார், சகோதரங்கள், மற்றும் ஆயிரக் கணக்கானோர் இன்று அர்ச்சியசிஷ்டர்களாயும், முத்திப்பேறு பெற்றவர்களாயும் விளங்கப் பேணாட்டே காரணமாவர்.

இவர் கிளாயுவோ என்னும் ஆச்சிரமத்தில் இருக்கும்போது ஆரம்பத்திலே அதிக கஷ்டங்களை அனுபவித்தார். இவருடைய ஞானப்பிள்ளைகள் குடிக்கக் கஞ்சிக்குத்தானும் வழியின்றித் தவித்தனர். ஆனால், இவரது வல்லபமுள்ள மன்றாட்டினாலும், ஆச்சரியத்திற்குரிய தேவபராமரிக்கையினாலும் அவர்கள் அற்புதமாகக் காப்பாற்றப்பட்டு வந்தார்கள். அதனால், ஆச்சிரமமும் அதிகதீவிரமாக விருத்தியடையத்தொடங்கியது. இவர்மரிக்கும்போது அங்குமாத்திரம் எழுநூறு சந்நியாசிகள் இருந்தார்கள். அம்மட்டா! ஐரோப்பாவின பலபாகங்களிலும் 160கிளை ஸ்தாபனங்கள் அதன் கண்காணிப்பிலே ஸ்தாபிக்கப்படலாயின. 11-ம் நூற்றாண்டிலே மிக மோசமான நிலைமையில் சீர்கெட்டுப்போயிருந்த சந்நியாச வாழ்க்கைக்குப் புத்துயிர் அளித்து அதனை உச்சநிலைக்குக் கொண்டுவந்த வீரர் திலகம் பேணாட்டேயாம்.

இவர்காலத்தில் ஐரோப்பாவில் பரவியிருந்த 'அல்பியென்சியனிசம்' என்னும் மதப்பிரிவினையை இவர் அடக்கி வேருடன் களைந்தார். 1130-ம் ஆண்டிலே திருச்சபையை இருபிரி

# அர்ச். பேணுட் பரமபதம் : : : :

வாக்கி இருபாப்புமாரும் சம்பேதுருவானவரின் பதிலாளிகள் தானேஎன்று பிடிவாதமாக நின்றனர். கருதினல்மாரும், அரசர்களும் பிரிந்திருந்தனர். இந்தப்பிரிவினையை இவர் அறவே ஒழித்துத் தமது போதனையாலும், சாதனையாலும் எல்லோரையும் ஒருமனப்படுத்தித் திருச்சபையைத் திரும்பவும் ஓர் குடையின்கீழ் கொண்டுவந்தார். பாப்பானவரோ, மற்றும் அரசர்களோ எவராவதுநீதிதவறி, கிறீஸ்தவஒழுக்கம்மீறி நடக்கும்போது இவர்அவர்களைக் கடுமையாகக்கண்டித்து ஐரோப்பாவில் எப்போதும் நீதியும், ஒழுக்கமும், சனமார்க்கமும் நிலவும்படியாக அயராமுயற்சியுடன் பிரயாசையெடுத்து வந்தார். இவர் ஓர்மவுனசபையைச் சேர்ந்தவராயிருந்தும் அவசியமான அலுவல்களின்நிமித்தம் பலதடவைகளில் தாம் அதிகமாய் விரும்பிநேசித்த ஆச்சிரமத்தை விட்டு விஷம்நிரம்பிய ஐரோப்பாவிலே அன்பையும், நேர்மையையும் விதைககச்சென்றார். இவரின் நற்புத்திமதிகள், அரிய பிரசங்கங்களைக் கேட்பதற்குப் பாப்பானவரும், அரசர்களும், பிரபுக்கள் முதலியோரும் சென்றுவந்தனர். இரண்டாம், மூன்ரும் செஞ்சிலுவைப்படைகளைத் தமது அமிர்தம்நிரம்பிய—வாக்குவல்லபமுள்ள போதனையாலும், எண்ணற்ற புதுமைகளாலும் ஐரோப்பிய அரசர்களின் தலைமையிலே துருக்கர் வசமிருந்த பரிசுத்த ஸ்தலங்களைக் கைப்பற்றஅனுப்பிவைத்தார். இந்தத் தவபோதகரைப் பற்றி ஒருசிறியகட்டுரையிலே சகலத்தையும்எழுதுவது அரிதிலும்அரிது. 2,162 புஸ்தகங்களுக்குமேல் இவரைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதெனில், இவரது புனிதசீவியமும், அரிய செயல்களும் எப்படிப்பட்டனவென்று ஓரளவில் உணர்ந்துகொள்ளலாம்.

இவர் தேவதாயாரின்விசேஷ பக்தராகவும், சிறந்தகவிஞராகவும் விளங்கியிருந்தார். தேவதாயார்மீது இவர்கொண்டிருந்த அணைகடந்த அன்பானது அவ்வன்னைபேரில் இவர்பாடிய கீதங்களிலும், இயற்றியசெபங்களிலும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற்புலனுகின்றது. துன்பதுயரங்களிலும், கவலை கஷ்டங்களிலும் உழலும்போது மிகுந்த பக்திவேகத்துடன் நாம் விரும்பிச் சொல்லிவருகின்ற "மிகவும் இரக்கமுள்ளதாயே, இதோஉம்முடைய அடைக்கலமாக ஓடிவந்தோம்...." என்று இவர் இயற்றித்தந்த உருக்கமானசெபம் சகலருடையமனதையுமேஅருட்டி நம்பிக்கையும், ஆறுதலும் அருளவல்லது என்பதை எவர்தான்மறுப்பர்? திவ்வியயேசுவில் இவர்வைத்திருந்த அளவற்றஅன்பும், அவரது மாசற்றதாயாரிலவைத்த இணையற்றபாசமுமே தமதுசித்தியின் இரகசியமென்று இவரேஅடிக்கடி சொல்லிவந்தார்.

இவரின் இருதயத்தில் தேவசிநேகம் சுடர்விட்டு எப்போதுமே பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது. தேவனில் வைத்த அளவற்ற அன்பினுல் இவருடையஇருதயம் ஊடுருவப்பட்டாற்போல் இருந்தது. ஒருநாள் இவர் வழமையிலும்பார்க்க அதிகபக்திஉருக்கத்தோடு சிலுவைஅடியில்இருந்து "ஓ, எங்கள்மகிமையான யேசுவே! எனது நேசமீட்பரே! எங்கள் உத்தம மனஸ்தாபத்திற்குப் பாத்திரமானவர் நீர் ஒருவர்தான் அல்லவோ? உமதுதிருப்பாடுகளில் நான்பங்குபற்றி உம்முடன் மரிக்கும் பாக்கியம் எனக்குஇருந்தாலோ" என்று பிரலாபத்துடன் செபித்துக்கொண்டிருக்கையில் அந்தப் பாடுபட்டசுரூபம் அற்புதமாகச் சிலுவையில்நின்று ஒருகரத்தைக் கீழே இறக்கி அர்ச். பேணுட்டை அரவணைத்ததுஎன்றுசொல்லப்பட்டிருக்கிறது. இவர் தமது ஞானமக்களுக்கு இதையே படித்துப்படித்துச் சொல்லிவந்தார். இவரின்கடைசிவார்த்தைகளும் இவைகளே: "நேசயேசுவை அதிகமாகநேசியுங்கள், அளவுகணக்கின்றி நேசியுங்கள்."

## நாளு சங்கதிகள்

— சோவியற்அரசு சென்றவருடத்திலும்பார்க்க இவ்வருடத்திலே தனது யுத்தோபகரணசெலவை 360 கோடி றூபிளால் குறைத்துச்செலவிடவிருக்கிறது. இவ்வருடத்திலே அதன் அரசிறைவருடச் செலவுபணம் 53,050 கோடி றூபிள். இதிலேஅதன்பாதுகாப்புச்செலவு 11,020கோடி றூபிள். அதாவது அதன் அரசிறை வருடச்செலவு பணத்தில் ஏறக்குறைய நூற்றுக்கு 21 வீதத்தை அது யுத்தோபகரணங்களுக்குச் செலவிடவிருக்கின்றது.

— இங்கிலாந்திலே பிறெஸ்ரன்நகரிலுள்ள ஆங்கில வேதசாட்சிகளின் கோவிலிலே சென்றஆடி மாதம் 19-ந் திகதி ஞாயிறுவாரம் வண. தோமஸ் ஹொட்சன், வண. பிரான்சீஸ் ஹொட்சன்எனும் இரட்டைப்பிள்ளைகள் லன்காஸ்றரின் மேற்றிராணியாரானபிளின் ஆண்டவராலே குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றார்கள்.

— இரும்புத்திரைநாடுகளில் ஒன்றுகிய ரூமேனியாவின் குடிசனத்தொகை 1 கோடியே 60 லட்சம்பேர். இவர்களில் ஏறக்குறைய ஏழுலட்சம்பேர் அதாவது ஒவ்வோர் இருபது ரூமேனியர்களுக்கு ஒருவர்வீதம் சிறைச்சாலைகளிலும், காவல்முகாங்களிலும் இருந்துவருவதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இந்தவிபரம் கடந்தசிலமாதங்களிலே அந்நாட்டிலிருந்து தப்பியோடிய அகதிகள்மூலம் வெளிவரலாயிற்று.

— வருகிற ஐப்பசிமாதம் 8-ந்திகதி ஆரம்பமாகவிருக்கின்ற லண்டன்–நியூசிலாந்து ஆகாயவிமானப் பந்தையத்திலே பந்தையவிமானங்கள் தரித்துச் செல்லும் இரண்டாவது இடம் நீர்கொழும்பாயிருக்குமென்று லண்டனிலிருந்து சென்றபுதன்கிழமை செய்திகிடைத்திருக்கிறது. இந்தப்பந்தையத்தில் கலந்துகொள்ளவிருக்கும் ரோயல்ஆகாயப்படையைச்சேர்ந்த மூன்று கன்பெரு ஜெற்விமானங்களினதும் சராசரிகெதி 500 மைல் வரையில் இருக்குமென்று அறிவிக்கப்படுகிறது.

# தேம்பாவணியும் செபமாலையும்

## களிகூர்ந்தகாரணிக்கம்

### முதற்காரணிக்கம் — 2-ம் பிரியதத்தம்

### 2. மங்கள வார்த்தை



திருமணம் நிறைவேறிய சிலதினங்களால சூசையப்பர் தனதுமனையாளுடன் தன்னுடைய சொந்தஊராகிய நசரேத்துக்கு வந்துசேர்ந்தார். அங்கு மேகத்துள்மறைந்த இரு சுடர்கள்போல இருவரும் ஒருசிறுகுடிசையில் தரித்திரராகவே வாழ்ந்துவருகிறார்கள். கன்னிமரியாள் தனதுகன்னிமை அழியாதவாறும், சூசையப்பர் தனது விரத்தத்துவத்திற்குப் பங்கம் ஏற்படாதவாறும் கணணை இமைகாப்பதுபோலத் தங்கள்கற்பைப் பாதுகாத்து நித்தியமும் கடவுளை வழிபடுவதிலே தங்கள்காலத்தைக் கழித்துவருகின்றார்கள். இவ்வாறுகஇருவரும் அன்பின்வாழ்வாகிய இல்லறத்தோடு, மற்றெவராலும் இணைப்பதற்கரிய அருளின்வாழ்வாகிய துறவறத்தையும் ஒன்றுபடச்சேர்த்து ஈரறங்களையும் ஒருசேர அனுட்டித்துவருகிறார்கள்.

பரிசுத்ததம்பதிகளாகிய இவர்கள் உலககாரியங்கள் மனதிலேநுழையாதவாறு, கண்முதலான ஐம்பொறிகளின் கதவுகளை அடைத்து, அறத்தைக் காவலாகவைத்துத் தவவாழ்க்கை நடத்திவருகிறார்கள். சென்மபாவதோஷம் நீங்கப்பெற்ற இவர்களின் கண்களுக்கு உலகின் பாவாக்கிரமங்கள் எல்லாம் தெளிவாகப் புலப்பட்டதால், அந்தத்தீமைகளின் கொடுமையைக் கண்டு மனஞ்சகிக்கவாற்றுது அஞ்சி நடுங்குகின்றார்கள்.

சூசையப்பரோ கடவுளைப்பார்த்து, "உலகெலாம் ஆளும்அரசே! என் உயிரே! தயைக்கடலே! குன்று ஒளியே! அருட்பரனே! எனப் புகழ்ந்து வாழ்த்தி "நீர் எங்களுக்கு இரக்கஞ்செய்யக் குறித்தநாள் எப்போதோ? பசாசுகளின் வல்லமைகெட நீர் இப்போதுதானே மனிதனுய் அவதரித்தலாகாதா? எண்ணுக்கணக்கில்லாத உயிர்கள் நரகத்திலே விழத்தக்கதாகப் பசாசுகள் இவ்வுலகை ஆட்சிசெய்தல் நல்லதா? மனிதஅவதாரஞ் செய்வோமென்று சொன்ன காலத்திலே காட்டிய பெருந்தயையை இப்போது எண்ணிப்பார்த்தல் ஆகாதோ? புண்ணியவாளர் புலம்பும் ஓசையையும், பச்சிளங்குழந்தைகள் அழும்ஓசையையும் கேட்டெங்கிலும் நீர் இரங்கலாகாதா? எனப் புலம்பிஅழுது, "அடியவனுகிய என்னிடத்தில் பலகுற்றங்கள் இருப்பினும் கன்னித்தாயின் திருக்கரங்களில் உன்னைக்கண்டு களிக்கவும், உன்னுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை என்தலைக்கு மாலையாகத் தரிக்கவும், உன் குதலைமொழிகளை என்காதாரக்கேட்கவும் கருணைசெய்வாய்என என்றும்போல மன்றுடிக்கொண்டிருக்கிறார்.

கன்னித் தாய்தன் கரத்துன்னைக்
 கண்(டு)உள் உவப்ப உன்மலர்த்தாள்
சென்னித் தாரென்(று) அணிந்திலங்கச்
 சிறுவ னுய்நீ அமுதுணுங்கால்
துன்னித் தாழ்ந்து தொழஉன்தீம்
 சுவையார் குதலைச் சொற்கேட்ப
என்னிற் தாழ்வுண் டாயினுமென் [பான்
 இறைவா அடியேற்(கு) அருள்கென்

கன்னிமரியாளும் சொல்லமுடியாத பக்திவேகத்துடன் சூசைமாமுனிவனுடைய சொற்களுக்கு இசைகூட்டுவதுபோல இரட்சகர் விரைவில் வந்துதிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறாள்.

இன்னுன் இன்ன யாவும்உரைத்(து)
 ஏங்கி ஏங்கி அழுகின்ற
அந்நாள் அன்ன உரைக்(கு)இசையாய்
 அன்பு தூண்டும் அரியநசை
தன்னால் உன்னப் பொரு(வு)அற்ற
 தரும கன்னி மரியென்பாள்
பன்னுள் தின்ன தருள்புரியப்
 பரமன் எய்த வேண்டினளே.

['அன்புதூண்டும் தன் அரியநசையால்' என இயைக்குக. அன்பினுல் தூண்டப்படும் தனது அருமையான ஆசையினுல் என்பதுபொருள்; பொருவு-ஒப்பு; தின்னுத-கிடையாத; எய்த-திருஅவதாரஞ் செய்ய.]

என்றுபுலவர் கூறுமவார்த்தைகளில் இரட்சகரின் வருகைக்கு மரியம்மாள் எத்துணை ஆசைஆவலோடு விரும்பிக் காத்திருந்தாள் என்பது நன்குதெளிவாகும்.

இவ்வாறுகச் சூசையப்பரும், கன்னிமரியம்மாளும் "கடலிற் கப்பல்சென்றவழியும், ஆகாயத்தில் அன்னம்பறந்து சென்றவழியும் ஆராய்ந்து அறியப்பட்டாலும் இரட்சகர் மனுமகனுய்ப் பிறந்துவரும்வழியை அறியவல்லவர் யார்?" என்றிரங்கி ஏங்கியவர்களாய், "உலர்ந்த மரங்கள் தழைக்கும்படி பெய்தமழைபோலவும், இருளை ஒழிக்கக் கிரணங்களைப்பரப்பும் சூரியனைப்போலவும், பெற்றதாயானவள் தன்மக்களைத் தேடிக்கொண்டு வருவதுபோலவும் நீ என்றுவருவாயோ?" என்று

பண்டிதர், C. செல்வரத்தினம்

ஆண்டவரின் வருகையை ஆவலோடு காத்திருக்கும்நாளிலே — அதாவது விவாகம்நடந்த ஏழாம்மாதமாகிய பங்குனிமாதத்தில் அவர்களின் குடிசையில் ஒருமுக்கிய சம்பவம் நிகழ்கிறது.

அன்று இருபத்தைந்தாம் திகதி. தாமரை தனதுஇதழ்களைக் குவித்துக்கொள்ளும் மாலைநேரம். மரியம்மாள் வீட்டுவேலைகளைச் செய்துமுடித்தபின் தனதுசிற்றறையிலே செபத்தியானத்தில் மூழ்கி மெய்மறந்திருக்கின்றாள். அந்தநேரத்திலே கடவுள் உலகத்தை இரட்சிப்பதற்காகக் கபிரியேல்என்ற தேவதூதனை அவளிடத்தில்அனுப்புகின்றார்.

அந்தச்சம்மனசானவர் ஒளிவீசும் உருவத்தோடு மோட்சத்திலிருந்து வெளிப்பட்டுக் கன்னிமரியாள் செபித்துக்கொண்டிருந்த அறையைநோக்கி விரைவாகச்செல்கின்றார். அவளைக்கண்டதும், பிறைச்சந்திரனைப் பாதகுறடாகத் தாங்கிநிற்கும் அவள்பாதங்களில் வீழ்ந்துவணங்குகிறார். பின்னர்—பிரியதத்தத்தினுலே பூரணமானவளே வாழ்க! கர்த்தர்உம்முடனே; ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள் நீரே—என்ற தேனினும்இனிதாய மங்களவார்த்தையைச் சொல்லுகிறார். கபிரியேற சம்மனசானவர் மங்களவார்த்தை கூறியவகை:

"பொய்யகன்(று) எழுவ தெய்வப்
 பூரண ஓகையாளே
ஐயகன்(று) உவப்பில் நாதன்
 அடைந்துவாழ் நெஞ்சத் தாளே
வையகம் வைகும் வாய்ந்த
 மாதருள் எண்ணில்ஆசி
துய்யகம் பொலியப் பூத்த
 சுந்தரி வாழி என்றான்"

[பொய் அகன்று—பொய்நீங்கி (மெய்கொண்டு) தெய்வஓகையாளே — தேவவரங்களாற் பிரியசெல்வியே; ஐ அகன்று—சந்தேகமில்லாமல்; துய் அகம் — தூயமனதில்]

என்றுமுனிவர் அமிழ்தினும் இனிதாகப் பாடியவகை நாம் பன்முறை பாடிப்பாடி இன்புறுவதற்குரியதாகும்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# கிறீஸ்தவமும் தமிழும்

(முன் தொடர்ச்சி)

இத்தகைய புலமைத்திறம் வாய்ந்த இப்பெரியார் தமிழுக்கும் மிகச்சிறந்த தொண்டாற்றியுள்ளார்என்றால் இதில் வியப்பொன்றுமில்லை. இவர் கிறீஸ்துவ தத்துவ உண்மைகளைத் தமிழிலே எழுதிக் காட்டினார். தத்துவ சாஸ்திரத்தைப்பற்றிப் பேசுவதோ, எழுதுவதோ சுலபமன்று. ஆங்கிலத்தில் எழுதியுள்ள தத்துவநூல்களைத் தமிழிலே மொழிபெயர்ப்பதும் கஷ்டமாயிருக்கும் இந்தக்காலத்தில், கிறீஸ்துவ தத்துவத்தை இற்றைக்கு 300 வருடங்களுக்கு முன் ஓர்ஐரோப்பியர் சுலபமாக எழுதிக் காட்டியுள்ளாரென்றால் அதன் திறத்தைப் பற்றி வேறொன்றும் சொல்லத் தேவையில்லை. இவர் எழுதியுள்ள நூல்களில்ஒன்று ஆத்தும நிர்ணயம் (Science of the Soul) என்பது. மற்றொன்று ஞான உபதேச காண்டம். மற்றுமொன்று தூஷண திக்காரம் என்பது. இவற்றிலே முதலில் குறித்தது ஒரு தத்துவநூல். இரண்டாவது குறித்தது கிறீஸ்துவ கோட்பாடுகள் பற்றியது. இது நான்கு பாகங்களாக அமைந்தது. மூன்றாம்நூல் வேத தர்க்கம் பற்றியது. இவ்விதமாகத் தர்க்கம், சாஸ்திரம், தத்துவம் என்ற இவற்றின் தலைப்பின் கீழ் பெரிய நூல்களை இவர் எழுதிப்போந்தார். இது காரணம்பற்றியே இவரை அறிந்தோர் இவரைத் 'தத்துவபோதகர்' என்றே அழைத்தனர். அப்பெயர் இன்றும் அவரைச் சூழ்வதாயிற்று.

தத்துவபோதக சுவாமிகளுக்குச் சற்றேறக்குறைய 50 வருடங்களுக்குமுன் பரீஸ்நகர சர்வகலாசாலையில் தத்துவநூல் ஆசிரியராய்விளங்கி, ஸ்பானியநாட்டின் செல்வச்சீமானாய் விளங்க வேண்டிய தகுதிவாய்ந்த பெரியார்ஒருவர் இதையெல்லாம் உதறித்தள்ளிவிட்டுத் திருநெல்வேலிக்கரையில்உள்ள பரதவர் வாழும் சிற்றூர்களைத் தேடிப் போந்தார். இவரதுபெயரைத் தற்போது கேளாதார்கள் எவருமில்லை. இவர்தான் சென் பிரான்சீஸ் சேவியர் என்று நாம் ஆங்கிலத்தில் அன்புடன் அழைக்கும் புண்ணியசீலர். இவர் இந்தியாவிற்கு வந்தது 1542-இல். இவ்வுலகைவிட்டுப் பிரிந்தது 1552-இல். இந்தக் குறுகிய பத்துவருடகாலத்தில் யேசுவின் திருமறையைத் தென்னாட்டின் கீழ்க்கரையிலும், மேற்கரையிலும். இவர் பலலட்சக் கணக்கான மக்களுக்குப் போதித்து அறிவுறுத்தினார். அன்னாரது வேதபோதகப் பெருமையும், இன்றைக்கும்அழியாமல் இலங்குகின்ற அவரது உடலின்பெருமையும் யாவரும் அறிந்ததே. ஆயினும், இவரும் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளாரென்றால் அதுதான் பலருக்கு விந்தையாயிருக்கலாம். ஆனால், உண்மையாகவே தமிழ் வசனத்தை முதலில்எழுதினவர் அவரே. "வேதவினாவிடை" (Catechism) என்ற ஒரு சிறு நூலை இவர்எழுதினார். முதன் முதலாகத் தமிழில் அச்சேறிய நூலும்இதுவே. இதன் தமிழ் மிகப்பாராட்டத் தக்கதன்று. ஆயினும். தமிழிலேஎழுந்த முதல்வசனநூல் என்பதற்காகவே இதைஇங்குகுறிப்பிட்டேன். ஆயினும், இவரை அடுத்து இவர்பின் திருநெல்வேலிச்சீமையில் வேதத்தைப்பரப்புந்தொழிலில் ஈடுபட்ட ஹென்றிக் ஹென்றிக்கஸ் (Henrique Henriques) சுவாமிகள் இவ்வேத வினாவிடையைத் திருத்தியமைத்தார். இவரின் தனித்தமிழ்த் தொண்டு கிறீஸ்துவம் தமிழுக்கு ஆற்றியபணியில் முதலாவது என்று குறிப்பிட வேண்டும். ஹென்றிக்கஸ் சுவாமிகள் இதனைத் திருத்தியமைத்ததோடு நில்லாமல், பெரியதும் சிறியதுமான இரண்டு புது வேதவினாவிடைகளும் எழுதித் தந்தார்: "கிறீஸ்துவின் சரிதை", "தேவமாதா வரலாறு" — இவை போன்றநூல்களோடு தமிழுக்கு எளியநடையில் ஒரு நிகண்டும், இலக்கணமும் அடிகள் கண்டார். இக்காரணம் பற்றியே இவரைத் தமிழுக்குத்தொண்டு செய்த முதல்கிறீஸ்தவர் என்று சொல்ல வேண்டும். இவர் வாழ்ந்தகாலம் 16-ம் நூற்றாண்டின் இறுதிப்பாகமாகும்.

கிறீஸ்தவர்கள் தமிழிக்குஆற்றியதொண்டு இருபெரும்பாகங்களாகப் பிரிகின்றது. முதற்பாகம் மேல்நாட்டினின்று நம் நாடுபோந்த ஐரோப்பியகிறீஸ்தவர்கள் தமிழுக்குச் செய்த பணி. மறுபாகம் அவர்களைப் பின்பற்றித் தமிழ்க்கிறீஸ்தவர்கள் தமிழுக்குஆற்றியதொண்டு.

முதற்பாகத்தை எடுத்துக் கொண்டால், தமிழ்ப்பாஷைக்கு முதன்முதல் பணியாற்றியவர் ஹென்றிக் ஹென்றிக்கஸ். இவர்வாழ்ந்தகாலம் 16-ம் நூற்றாண்டு. இவருக்குப்பின் 17-ம் நூற்றாண்டில் தத்துவபோதகர் என்னும் தெநொபிலி சுவாமிகள் பலதமிழ்நூல்களை எழுதினார். இதற்குஅடுத்த நூற்றாண்டில் வீரமாமுனிவர் திகழ்ந்தார். இவர்காலத்தில் கிறீஸ்தவர்களின் தமிழ்த்தொண்டு மிகத் திறம்பட நடந்தது. இதற்கு வீரமாமுனிவரது புகழ்மட்டுங் காரணமன்று. அவரோடு இப்பணியில் ஈடுபட்டிருந்த டெரோஸி, பெர்ட்டோல்டி, மேனார்டுஎன்ற இம்மூவரும் காரணமாவார்கள்.

இவ்விதமாகத் தமிழ்த் தொண்டு கிறீஸ்தவசமூகத்தில் பெருகிற்று. முன் நூற்றாண்டுகளில் ஒருவர் ஆற்றியபணி 18-ம் நூற்றாண்டில் நால்வரால் நிகழ்ந்தது. கிறீஸ்தவ தமிழ்ப்பணியென்ற புண்ணியநதியானது தான்உதித்த இடத்தினின்றும் இருநூறுவருடங்கள்ஓடிப்பெருக ஆரம்பித்தது. இங்ஙனம், பெருகியஆறு 19-ம் நூற்றாண்டில் உண்மையிலேயே பெருக்கெடுத்தோட ஆரம்பித்தது. இந்தநூற்றாண்டிலே அதன்பிரவாகம் கிறீஸ்தவ தமிழரையும் தொடஆரம்பித்து. பலரைத் தமிழ்த்தொண்டில் ஈடுபடச்செய்தது. அவர்தம் பெயரைமட்டுங்கூடக் குறிப்பதும் இவண் முடியாது.

(தொடரும்)

# கத்தோலிக்க சமாச்சாரம்

### ஜெத்செமனிய மகாலயம்

நம்திருமீட்பர் ஜெத்செமனிய பூங்காவனத்திலே இரத்தவியர் வைவெயர்த்த அதேஇடத்தில் இன்று பஸிலிக்காஎனும் மகாலயம்ஒன்று இருந்துவருகின்றது. சிலுவைப்படையெழுச்சி காலத்திலும், பின்னர் நான்காம்நூற்றாண்டிலும் இருந்துவந்த பழையகோவில்கள் இருந்தவிடத்திலேயே இது கட்டியெழுப்பப் படலாயிற்று. 1920-ம் ஆண்டு நிலத்தை அகழ்ந்து நடத்திய ஆராய்ச்சிகளின் போது, கிறீஸ்துநாதர் மரணவஸ்தைப்பட்டபோது முழந்தாட்படியிட்டிருந்ததுதானென்று நம்பப்படுவதாகிய அதேகல் தற்போது அம்மகாலய பெரிய அடுத்தார் முன்பாகப் பூச்சியமாக வைக்கப் பட்டிருக்கிறது. இம்மகாலயத்தில் நிறைவேறும் பெரியபாடற்பூசையை அஞ்சல் செய்வதற்குவேண்டியவசதிகளை ஜோர்தான் வானொலி நிலையம் ஒழுங்குபண்ணியிருக்கின்றது.

### பிரித்தானிய புதியபிரதிநிதி

பரிசுத்த ஸ்தானத்தினிடமாகப் பிரித்தானிய அரசாங்கத்தின் புதியபிரதிநிதியாகச் சமீபத்தில் கே. சி. எம். சி. எனும் பட்டம் சன்மானிக்கப்பெற்றவரான, திரு. டாக்ளஸ் ஹோவாட்அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இருமகாயுத்தங்களுக்கும் இடைப்பட்ட காலத்திலே இவர் ரோமைநகரில் இத்தாலிய அரசாங்கத்தினிடமாக இருந்துவந்த பிரித்தானிய ஸ்தானிகரின் இரண்டாவது காரியதரிசியாக மூன்று வருடகாலம் கடமைபார்த்தவர். பரிசுத்த ஸ்தானத்தினிடமாகச் சமீபகாலங்களில் நியமனம் பெற்ற பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளைப் போலவே இவரும் ஓர் கத்தோலிக்கர் அல்ல. ஆனால், கத்தோலிக்க மக்களைப் பெருந்தொகையினராகக்கொண்ட ஸ்பெயின், ஆர்ஜென்ரீனா, உறுக்குவே முதலாம் நாடுகளில் இவர் உயர்ந்த பதவிகள் வகித்திருக்கின்றார்.

### 1,404 ஸ்பானியகோவில்கள்

ஸ்பானிய உள்நாட்டுயுத்தம் நடந்தகாலத்திலே கம்யூனிஸ்த படைகளால் அழிக்க, அன்றேல் சேதமாக்கப்பட்ட 13 ஆசனக் கோவில்கள் திரும்பவும் கட்டியெழுப்பப்பட்டிருப்பதாய் ஸ்பானியபுள்ளிவிபர தேசீயஸ்தாபனம் அறிவிக்கின்றது. 12மேற்றிராசனமனைகளும், 10 குருமடங்களும், 18 மகாலயங்கள், சந்நியாசஆச்சிரமங்கள் ஆதியனவும், 1,404 பங்குவிசாரணைக் கோவில்களும், 57 தருமசாலைகள், பிரஸ்தாபனங்களும், 92 கன்னிகாமடங்கள், அநாதசாலைகளும், 60 குருமனைகளும் திரும்பக் கட்டப் பட்டிருக்கின்றன. இவற்றைப் பழுதுபார்க்கவும் திரும்பக் கட்டியெழுப்பவுமாக ஸ்பானியஅரசாங்கம் 55 லட்சம் பவுண் செலவிட்டிருக்கின்றது.

### நாற்பதாவது குருவானவர்

அயர்லாந்தின் பிரபல மேனாத் குருமடத்திலே சமீபத்தில் வண. பிஜில்சுவாமியார் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றார். இவர் அங்கு ஞாயிஸ்போர்க் விசாரணைப்பங்கைச் சேர்ந்தவர். இவருடன் அவ்விசாரணைப்பங்கைச் சேர்ந்த குருப்பிரசாதிகளாய் 40 பேர் இன்னமும் சீவந்தராய் இருக்கின்றனர். ஞாயிஸ்போர்க் விசாரணைப்பங்கு 2,440கத்தோலிக்கரையும், 566 கத்தோலிக்க குடும்பங்களையும் கொண்டது. அக்கிராமத்தைச் சேர்ந்த 40 குருமாருள்ளும் ஏறக்குறைய அரைவாசிப்பேர் அயர்லாந்திலேயே இருந்து வருகின்றனர். இவர்களில் ஒருவர் ஆசொன்றியின் மேற்றிராணியாரான பேர்கஸ்ஆண்டவர். ஏனையோரெல்லாம் மிஷன்நாடுகளில் பரந்திருக்கின்றனர். ஓர் ஐரிஷ் விசாரணைப்பங்குஎன்றமட்டிலே இதுதான் அதிகமான குருமாரைக் கொண்டிருக்கிறதென்று சொல்லமுடியாது. ஏனெனில், அங்குள்ள டிரூமாட் விசாரணைப்பங்கு தனதுமக்களில் 42 பேருக்கு மேற்பட்ட குருமார் இன்னமும் சீவந்தராய் இருந்து வருவதாகப் பெருமைபாராட்டுகின்றது.

### நோர்வேயும் கத்தோலிக்கரும்

ஓர்புறொட்டஸ்தாந்தநாடாகிய நோர்வேயிலே பரிசுத்தபாப்பரசர் கத்தோலிக்கமேற்றிராணிமாரின் அதிகாரவரிசையைத் திரும்பவும் ஏற்படுத்தி, ஒஸ்லோ தலைநகர் விக்காரியத்தை ஓர் மேற்றிராசனமாக வகுத்து, அதன் விக்கார்அப்போஸ்தலிக்குவாய்இருந்துவந்த மாங்கேர்ஸ் ஆண்டவரை அந்நகர் மேற்றிராணியாராக நியமனஞ் செய்திருக்கின்றார். அந்நாட்டிலுள்ள 5,000 கத்தோலிக்கரில் ஒருசில நூற்றுக்கணக்கானோரையே இந்த மேற்றிராசனம் அடக்கியிருக்கின்றது. இதிலே 20 கோவில்கள், 16 பங்குவிசாரணைகளுடன் 22 குருமார் இருக்கின்றனர். மத்தியநோர்வேயும் ஓர் விக்காரியமாக்கப்பட்டு, அதன் விக்கார் அப்போஸ்தலிக்குவாக ரூத் மேற்றிராணியார் இருந்துவருகின்றார். இவ்வாறாகநோர்வேயிலே சமயப்புரட்சியுண்டாய்ப் புறொட்டஸ்தாந்த சமயம் தலையெடுத்தபின் கலைகுறைந்துபோயிருந்து கத்தோலிக்க சமயம் திரும்பவும் தலையெடுத்துவந்து, அதனால்தற்போது அங்கு மீளவும் கத்தோலிக்கமேற்றிராணிமாரின் அதிகாரவரிசையும் ஸ்தாபிக்கப்பெறலாயிற்று.

## ஆவணிமாதம்

போதுக்கருத்து:— மணவாழ்க்கையானது சர்வேசுரன் விதித்த சட்டத்தின்படி நடைபெறத்தக்கதாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— அவுஸ்திரேலியாவில் திருச்சபை செழித்தோங்கும்படியாக மன்றாடுவது.

## திருநாள் அட்டவணை

ஆவணிமாதம் — 1953

| | | | |
|---|---|---|---|
| வெ | 21 | அ. ஷாந்தால் அருளாயி பிரான்சீஸ்கம்மாள், வி. | (வெ) |
| சனி | 22 | மாசில்லாத மாதாவின் திரு இருதயத்திருநாள் | (வெ) |
| ஞா | 23 | இஸ்பிரீத்து ஆகம. பின் 13-ம் ஞாயிறு — அ. பிலிப்பு பெனிசியார், து. | (ப) |
| திங் | 24 | அ. பார்த்தலோமேயு, அ. | (சி) |
| செ | 25 | அ. பிரகாசர், இ. | (வெ) |
| புத | 26 | அ. செபிரினப்பர், பா. வே. | (சி) |
| வி | 27 | அ. கலசாஞ்சியு சூசையப்பர், த. | (வெ) |

சத்தியவேத
# பாதுகாவலன்
1953-ம் ஆண்டு
ஆவணி மாதம் 20-ந் திகதி

## இன்றைய நூற்றாண்டுவிழா

கொழும்பிலே பொறளையிலுள்ள அர்ச். பேணாட்டின்குருமடமானது தான்பெயர்கொண்ட பரலோகபாதுகாவலர் பரமபதஞ்சேர்ந்த 8-ம் நூற்றாண்டு விழாவைக் கண்டானந்திக்கும் பேரதிஷ்டத்தை இன்றுதினம் பெற்றிருக்கின்றது. பன்னிரண்டாம் நூற்றாண்டின் வீரர்திலகமெனத் திருச்சபையிலே புகழ்ந்துகொண்டாடப் படுகிறவரான அர்ச். பேணாட்(பெர்நார்து) இற்றைக்கு 800 வருடங்களின் முன்னே ஆவணிமாதம் 20-ந் திகதியன்று பரலோகசம்பாவனைக்கு அழைக்கப்பெற்றார். மூவேழுவருடங்களின்பின் மூன்றாவது அலெக்சான்டர் எனும் பாப்பானவரால அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றார். பெருந்தேவதொண்டராய், அருந்தபோதனராய், கீர்த்திவாய்ந்த சாஸ்திரவிற்பன்னராய், தேவதாயாரின் தலைசிறந்தபக்தராய், துறவற வாழ்க்கைக்குப் பெருமைவாய்ந்த ஓர்முன்னோடியாய், பாப்புமார், மேற்றிராணிமார், அரசர்கள், பிரபுக்கள் முதலானோருக்கு ஆலோசனைகூறிவந்த ஓர் அறிவுக்களஞ்சியமாய், பேரானபிரசங்கியாராய் மதப்பிரிவினையை ஒழித்தும், அரசர்களைச் சமாதானப்படுத்தியும், கணக்கற்றபாவிகளை மனந்திருப்பியும் என்றைக்குமே மறக்கமுடியாதவகையில் திருச்சபைக்கு ஆற்றிய மகத்தான பணிகாரணமாக அதன்வான மண்டலத்திலே மாபெரும் ஞானச்சுடர்களுள் ஒன்றாய்ப் பிரபைகாலித்துக் கொண்டிருக்கும் அர்ச். பேணாட்டைப் பொறளையிலுள்ள பெரிய குருமடம் தனது பரலோகபரிபாலகராகக் கொண்டிருப்பது ஓர்பெரும் பாக்கியமேஎன்க. ஏனெனில், அவருடைய பரிபாலனத்தின் கீழ் இந்தக்குருமடம் இளம்பிறையென்ன வளமபெற்றுக் கொழும்பு மேற்றிராசனத்திலும், சலாப, யாழ்ப்பாணமேற்றிராசனங்களிலும் 250 பேருக்குமேற்பட்ட குருமாரை இன்று தனது பழையமாணவர்களாகக் கொண்டுவிளங்குகின்றது. கொழும்பு அதிமேற்றிராணியாரும், சலாப, யாழ்ப்பாணமேற்றிராணிமார்களும் இதன் பழையமாணவர்களே. மேலும் இந்தப் பழையமாணவர்களில் எத்தனையோபேர் வைதிக, லௌகிக சாஸ்திரங்களிலே பெரியபட்டதாரிகளாயும், பண்டிதர்களாயும் திகழுகின்றார்கள். இத்தகைய பெருமைவாய்ந்த அர்ச். பேணாட்டின் குருமடம் தன் பாதுகாவலரின் நூற்றாண்டுவிழாவைக்கொண்டாடுகின்ற இச்சுபசந்தர்ப்பத்திலே அது கத்தோலிக்கபெற்றாருக்கும், கத்தோலிக்க வாலிபர்களுக்கும் விடுக்கின்ற தூதுதான் யாது? அர்ச். பேணாட்டையும், அவர்சகோதரரும் சகோதரியுமான அறுவரையும் துறவிகளாகவும், அர்ச்சியசிஷ்டர்கள், முத்திப்பேறுபெற்றவர்களாகவும காணும்படியாய் அவர்களின்பெற்றார் காட்டிய முன்மாதிரிகையையும், செய்த அருந்தியாகத்தையும் கத்தோலிக்கபெற்றார் கண்டு பாவிக்க வேண்டுமென்பதே. அர்ச். பேணாட்டையும், அவர் சகோதரங்களையும் பின்பற்றிக் கத்தோலிக்க வாலிபர்கள் பலரும் தேவ அழைத்தலுக்குச் செவிசாய்த்துக் குருத்துவ பதவியை மேற்கொண்டு தேவதொண்டாகிய ஆத்தும இரட்சணியதொண்டில் ஈடுபடவேண்டுமென்பதே. இந்தநோக்கங்கள் இனிதே நிறைவேறத்தக்கதாய் அர்ச். பேணாட்குருமடம் இவர்களுக்கெல்லாம ஓர் கலங்கரைத் தீபம்போன்று விளங்குவதாக!

## வேலைநிறுத்தம் இதுதானா?

இன்றைய ஸ்ரீலங்காவின் பெருமைவாய்ந்த சரித்திரத்திலே நிகழும் ஆவணிமாதம் 12-ந் திகதி புதன்கிழமை பெரிதும துக்ககரமான ஓர் தினமாகும். இத்துக்கத்தின் அறிகுறியாகத்தான் ஆங்காங்கு பல இடங்களிலும் கறுப்புக்கொடிகளை ஏற்றிப் பறக்கவிட்டிருந்தனர்போலும். ஆம், கம்யூனிஸ்த-சமசமாஜ தலைவர்களுக்கெல்லாம் அஃது ஓர் துக்கநாளேயாகும். தொழிலாளர்களே! திரும்பவும் வேலைக்குப் போங்கள்; ஏனெனில், நீங்கள் நடத்திய வேலைநிறுத்தத்தின் நோக்கம் வெற்றியாகிவிட்டதென்று தாங்கள்விடுத்த பத்திரம்ஒன்றிலே கம்யூனிஸ்த தலைவர்கள் பெருமையடித்திருக்கின்றார்கள். நல்லது, இந்தவேலை நிறுத்தத்தாலே தொழிலாளர்களுக்கு என்ன பிரமாதமான காரியம் கைகூடியிருக்கிறது? உதவிமான்யத்தை முன்போலவே வழங்க அரசாங்கம் முன்வந்துவிட்டதா? எமது நாடு தொழிலாளர்களின் சுவர்க்கலோகமாகக் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டதா? அரசாங்கம் பயந்துகலங்கிப் பாட்டாளி மக்களின் இரட்சகர்களென்று பெருமைபாராட்டிக் கொள்ளுகிறஇவர்களிடம்அதிகாரத்தைக் கையளிக்க உடன்பட்டுவிட்டதா? அன்றேல் கம்யூனிஸ்த புரட்சி நடைபெறத்தொடங்கும் நாடுகளிற்போன்று கலகத்தையும், இரத்தப்பிரவாகத்தையும், பரிநாசத்தையும் உண்டுபண்ணுவதாகிய அந்தநோக்கந்தான் கைகூடிவிட்டதா? தாங்கள் தொடக்கும் வேலைநிறுத்தம் எந்தவிதமான பலாத்காரமற்றதும், அந்தக் காந்திமகானின் முறையைக் கடைப்பிடித்துச் சாத்வீகமானதுமென்று அப்போதெல்லாம் இந்தக் கம்யூனிஸ்த-சமசமாஜிய தலைவர்கள் வாய்ப்பறை அறைந்தார்களன்றோ! அவ்வாறு கருமம் நடந்திருப்பின் இப்போதைய கதி இலங்கைக்கு நேர்ந்திராதன்றோ! போக்குவரத்துச் சாதனங்களாகிய புகையிரதங்கள், பஸ்கள, லொறிகள், கார்கள், திறாம்களைக் கற்கள்கொண்டும், போத்தல்கள்கொண்டும் தாக்குவதும், அவற்றிற்செல்லும் பிரயாணிகளைக் காயப்படுத்துவதும், தண்டவாளங்களைப் பெயர்த்தெறிவதும், சாய்ப்புகள், கடைகள், வீடுகளைக் கொள்ளையடிப்பதும், கட்டடங்கள், பாடசாலைகள், பஸ்கள் ஆதியவற்றை எரியூட்டுவதும், பொதுசனபாதுகாப்புக்கென அமர்த்தப்பட்ட பொலிஸரைக் கற்கள் கொண்டும், பிறஎத்தனங்கள் கொண்டும் எதிர்த்து ஊறுபடுத்தி, அவர்களின் உயிருக்கு உலைவைக்கத் தேடுவதும், பொதுசன அமைதியையும், சமாதானத்தையும் கெடுப்பதுந்தானா வேலைநிறுத்தம்? அந்தக் காங்கிஜியின் சாத்வீகமுறையான வேலைநிறுத்தம்? பலாத்காரமற்ற வேலைநிறுத்தம்? வேலைநிறுத்தஞ்செய்யத்தூண்டிவிட்டவர்களும், ஆவேசங்கொண்டு குமுறியெழுந்த சனக்கூட்டத்தை அடக்கிக் கட்டுப்படுத்த முடியாமற்போனவர்களுமே அதனால்நேர்ந்த அட்டூழியங்கள், இரத்தப்பிரவாகங்களுக்கெல்லாம் காரணரென்று சொன்னால் மிகையாகுமா? நமது இளம் பிரதமரைத் தலைமையாகக்கொண்ட அரசாங்கம் அவசரகால சட்டத்தையும், ஊரடக்குஞ்சட்டத்தையும் பின்முன்பாராது துணிகரமாக நடைமுறைக்குக் கொண்டுவந்திராவிடின் ஆங்காங்கு அலையலையாகஎழுந்து காடைத்தனத்திலும், சூறையாடுவதிலும், கலகஞ்செய்வதிலும் ஆவேசத்துடன் ஈடுபட்டுக்கொண்டிருந்த அத்துணை பெருந்தொகையானோரை அடக்கிவைக்க முடிந்திருக்குமா? கொழும்புநகர் கொழும்புநகராய் இருக்குமா? ஊர்ஊராய், நாடுநாடாய் இருக்குமா? அதனால் அரசினரும், பொலிஸரும், பொதுநலப்பிரியரும் இந்தவேளை நாட்டுக்குச் செய்தசேவை என்றைக்கும் பாராட்டத்தக்கதென்க!

### இஸ்பிரீ. ஆகமனத்தின் பின்
## 13-ம் ஞாயிறு
### சுவிசேஷ வாசிப்பு
(லூக். 17 : 11—19)

அர்ச். லூக்கா எழுதிவைத்தபடி பரிசுத்த சுவிசேஷத்தின் தொடர்ச்சி:— அந்தக் காலத்திலே யேசுநாதர் எருசலேம் நகருக்குப் போகையில் சமாரியா, கலிலேயா நாடுகளின் நடுவே நடந்துசென்றார். அவர்ஒருகிராமத்துக்குள் பிரவேசிக்கும்போது, குஷ்டரோகிகளாகிய பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து, தூரத்தில் நின்று: யேசுவே, போதகரே, எங்கள்பேரில் இரக்கமாயிரும் என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்கள். அவர்களை அவர்கண்டவுடனே: நீங்கள்போய், உங்களை ஆசாரியருக்குக் காண்பியுங்கள் என்றார். அவர்கள் போகும்பொழுதே சொஸ்தமானார்கள். அவர்களிலே ஒருவன், தான் சொஸ்தமானதைக் கண்டு உரத்தசத்தமாய்ச் சருவேசுரனை ஸ்துதித்துக் கொண்டு திரும்பி வந்து, அவருடையபாதங்களுக்கு முன்பாக முகங்குப்புறவிழுந்து அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் சொன்னான். அவனுமோ சமாரியனாயிருந்தான். யேசுநாதர் மறுமொழியாக: பத்துப்பேரும் சொஸ்தமானார்கள் அல்லவா? மற்ற ஒன்பது பேரும் எங்கே? இந்த அந்நியன் ஒழிய வேறொருவனும் திரும்பி வந்து சருவேசுரனுக்கு ஸ்துதிசெலுத்தக் காணோமே என்று சொல்லி அவனைநோக்கி: நீ எழுந்துபோ, உன்விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று திருவுளம் பற்றினார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## சிறிய றெயில்வேஸ்றேஷன்கள்

மக்கோனா, சந்தானை, பையகலை வடக்கு, கட்டுக்குருந்தை எனும்நான்கு றெயில்வேஸ்றேஷன்களையும் இம்மாசமுடிவிலே அரசாங்கம் திக்கெற்ஏசன்றுகளிடம் கையளிக்கவிருக்கிறது. அவ்வாறுசெய்வதால் இவற்றுள் ஒவ்வோர் ஸ்றேஷனிலுமிருந்து மாசந்தோறும் அது இருபதினாயிரம்ரூபா மிச்சம் பிடிக்கக் கூடியதாகும். அதாவது நான்கினாலும் மாதம்ஒன்றுக்கு றெயில்வேப் பகுதிக்கு எண்பதினாயிரம்ரூபா மிச்சம் ஏற்படும். இவற்றிலே சம்பளத்தால் மாத்திரம் மாதம்ஒன்றுக்கு 1,200 ரூபா மிச்சமுண்டாகும். இவ்வாறே சிறிய றெயில்வேஸ்றேஷன்களையெல்லாம் திக்கெற்ஏசன்றுகளிடம் கையளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மீகொடை றெயில்வேஸ்றேஷன் இம்மாதம் 1-ந்திகதியன்று திக்கெற்ஏசன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஓர்றெயில்வேஸ்றேஷன் திக்கெற்ஏசன்றின் பொறுப்பிலே விடப்படும்போது ஸ்றேஷன்வேலையும் அதிகம் நன்றாய் நடந்துவருகின்றதாம். அதற்குக்காரணம், அவர்கம்மிஷன்கணக்கில் வேலைசெய்வதேயாகும். ஓர்திக்கெற்ஏசன்றின் பொறுப்பிலுள்ள கொக்குவில்ஸ்றேஷன் வருடம்ஒன்றுக்கு ஏறக்குறைய இரண்டுலட்சரூபா வருமானம்காட்டுகின்றது. தற்போது ஓர் ஸ்றேஷனாக இருந்துவருகின்ற மக்கோனா வருடம்ஒன்றுக்குத் 94 ஆயிரம்ரூபாவே வருமானங்காட்டுகிறது.

# பொறளையில் காட்சியளிக்கும் குருமடம்

## தெரிந்து கொள்ளப்பட்டவரின் வாசஸ்தலம்



அர்ச். பேனுட் குருமடத்தைச்சேர்ந்த குருத்துவமாணவர் குருப்பட்டாபிஷேகம் செய்யப்பெறுகின்ருர்

நமதுகாலத்தில் முக்கியமாகத் தேவைப்படுகிறவர்கள் ஆர்ச்சியசிஷ்டார்களே. இந்தநெருக்கடியான காலத்திலே திருச்சபைக்குப் பலதேவைகள் உண்டு. அதன் சுபசெய்திகளை உலகின் ஒவ்வொருகோணத்திலும் போதிக்கும் வேதபோதகர்கள்தேவை. பிரபல பிரான்சிய தத்துவஞானியான மாரிடென் அவர்கள் எழுதுவதுபோல் "இக்காலத்தின் அங்கலாய்ப்புக்கு நிவிர்த்தி இதுவே; உலகம் வற்புறுத்திக்கேட்பது இதுவே; அர்ச்சியசிஷ்டர்கள்; அர்ச்சியசிஷ்டர்களே திருச்சபையின்போதனைக்கு — உண்மைக்கு முக்கியஆதாரம். அவர்களே அதன அணிகலன் — அழகு. இன்றுதினம் (ஆவணி 20) எமதரிய திருச்சபைத்தாயின் பெரியஅர்ச்சியசிஷ்டர்களில் ஒருவராகிய புனிதபேனுட்முனிந்திரன மரணமான எட்டாம்நூற்றுண்டு நிறைவுதினமாகும். [இவ்வர்ச்சிய சிஷ்டரைப்பற்றி அநேகர் அறியாமல் இருக்கக்கூடும். அவர்கள் "காவல"னின் மற்ருேர்பகுதியிலுள்ள அவரது சுருக்கமானசரிதையை வாசித்து மகிழ்ந்துகொள்ளலாம்.]

இப்பரிசுத்தரின்நாமம் கொழும்பு அதிமேற்றிராசனத்திலும், யாழ்ப்பாணம், சிலாப மேற்றிராசனங்களிலும் சேவைசெய்துவரும் அநேககுருப்பிரசாதிகளுக்கு ஓர் அன்பும், நன்றியும் ததும்பும் நாமமாகும். ஏனெனில், அவர்கள் இவ்வர்ச்சியசிஷ்டரின் பாதுகாவலிலுள்ள குருமடத்திலேயே தங்கள் குருத்துவபடிப்புகளை முடித்தனர். இந்த நூற்றுண்டுவிழா எவ்விடங்களிலும்பார்க்க இன்று அர்ச். பேனுட்டின் மேற்றிராசன குருமடத்திலே விசேஷவிதமாகக் கொண்டாடப்படும்.

ஆதலின் இத்தினத்தில் இப்பரிசுத்தரைத் தனதுபாதுகாவலராகக்கொண்ட குருமடத்தின்சரித்திரத்தை வாசகர்களுக்குச் சிறிதுஅறியத்தர விரும்புகின்ருேம்.

பரிசுத்ததிருச்சபையின் அற்புத வளர்ச்சியை யேசுக்கிறீஸ்துநாதரே ஓர்கடுகுமணியின் உவமையால் வர்ணித்திருக்கிருர் இந்தஉவமை அர்ச். பேனுட்குருமடத்துக்குமே சாலவும் பொருந்துமெனலாம். 1883-ம் ஆண்டு ஆவணி 28-ந் திகதியன்று மகா மேன்மை தங்கிய கிறிஸ்தோப்பர் பொஞ்ஜீன் ஆண்டகையவர்கள் கொழும்பு அதிமேற்றிராசனத்தின் பொறுப்பைக் கையேற்ருர். அன்று தொடடு அவரின்பேராவல் ஏதென்றால், சுதேசகுருமாரைப்பயிற்றும் ஓர் குருமடத்தை ஸ்தாபிப்பதேயாகும். அதற்கிணங்க அவர் முதன்முதலாகக் கொட்டாஞ்சேனைக் குருமனையில் அதி வண. கொலின் சுவாமியாரை அதிபராகக்கொண்டு ஓர்குருமடத்தை 1884-ம் ஆண்டு மாசிமாதம் 1-ம் திகதியன்று ஸ்தாபித்தார். இக்குருமடத்திலே அப்பொழுது பத்துக்குருமாணவர்கள் சேர்ந்திருந்தார்கள். இவர்களில் மூவர் இலங்கையர். மூவர் அயர்லாந்துதேசத்தவர். நால்வர் பிரான்சியர்.

மாதங்கள்பல கழிந்தன. கொட்டாஞ்சேனைக் குருமனையில் ஸ்தாபிக்கப்பட்டகுருமடம் மாணவர்களுக்குப் போதியஇடவசதியை அளிக்கவில்லை. அதனல் 1884-ம் ஆண்டு ஐப்பசி 27-ந் திகதியன்று இக்குருமடம் மருதானையிலுள்ள "கதெறம் ஹவுஸ்" எனும்இல்லத்திலே மாற்றியமைக்கப்பட்டது. மறுநாட்தானே அவ்வீடு ஆசீர்வதிக்கப்பட்டுத் திவ்வியபூசைப்பலியின்பின்னர் அதிமேற்றிராணியாரது விருப்பப்படி இக்குருமடத்திற்கு அர்ச். பேனுட் பாதுகாவலராகத் தெரியப்பெற்ருர். 'கதெறம் ஹவுஸ்' எனும் மனையானது தெரியப்பட்டவர்களின் வாசஸ்தலமாக நெடுங்காலமிருக்கத் தேவனுக்குச் சித்தமில்லைப்போலும். அதனல் இக்குருமடம் 1886-ம்ஆண்டு மார்கழி முதற்தேதியில் பம்பலப்பிட்டிப் பங்குக்குருவின் மனையிலே மாற்றி அமைக்கப்பட்டது. இவ்வாறு இக்குருமடம் தொடங்கிச் சிலவருடங்களுக்கிடையில் வெவ்வேறு இடங்களிலே மாற்றியமைக்கப்பட்டபொழுதிலும் 1884-ம்—1888-ம் ஆண்டுகளுக்கிடையில் அதிலே இரு சுதேசிகளும், 32 ஐரோப்பியரும குருப்பட்டம்பெற்றனர். இவர்களில் இருவர் மேற்றிராசன குருமார். 32 பேர் அமலோற்பவிசபைக் குருமாராவர்.

இந்த மேற்றிராசன குருமடத்தை 5 வருடகாலம் பரிபாலிக்கும் பெருமை பம்பலப்பிட்டிப் பங்குக்கேகிடைத்தது. அதாவது 1886-ம் ஆண்டு மார்கழி தொடக்கம் 1891-ம் ஆண்டு ஆவணி ஈருக. பின்னர் இக்குருமடம் அங்கிருந்து பொஞ்ஜீன் அதிமேற்றிராணியார் பொறளையில்வாங்கிய பெரியவளவிற்கு மாற்றப்பட்டது. அன்று தொட்டு—அதாவது 1891-ம் ஆண்டு தொடக்கம் இன்றுபரியந்தம் அர்ச். பேனுட்குருமடம் பொறளையிலேயே இருந்துவருகிறது. அந்நாட்தொட்டு அநேககுருமாரை இக்குருமடம் ஆக்கியுள்ளது.

1910-ம்ஆண்டு தைமாதமுதல் யாழ்ப்பாணமேற்றிராசனத்தைச் சேர்ந்த குருமாணவர்களும் இக்குருமடத்திலேயே குருப்பட்டம்பெறத்தொடங்கினர். இவர்களில் தற்போது பண்டத்தரிப்பு, பாததிமாகிரித் திருசேத்திர பரிபாலனராக இருந்துவருகிறவரான வண. ஜே. எவ். சேவியர்சுவாமியவர்கள் முதலாவதுகுரவராவர். அடுத்தபடியாகத் தற்போது யாழ்ப்பாண மேற்றிராசன குருமாதிகாரியாகவிளங்கும் அதிவண. எஸ். இம்மனுவேல் சுவாமிகளும், வண. பி. நீக்கிலாஸ் சுவாமிகளும், தோலகட்டி ஈசெபமாலைத்தாசர் ஆச்சிரமத்தை அடியிட்டவரான வண. பி. ஏ. தோமஸ் சுவாமிகளுமாவர். இவர்களே யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்தவர்களில் இக்குருமடத்தின் முதல்பழைய மாணவராவர். ஏனெனில், 1908-ம் ஆண்டுதொடக்கம் யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த குருமாணவர்கள் தங்கள் வேதசாஸ்திரப் படிப்புகளை முடிக்குமாறு இக்குருமடத்துக்கே அனுப்பிவைக்கப் பட்டனர். அன்றுதொட்டு இன்றுவரையும யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த குருமாணவர்களில் அநேகர் இக்குருமடத்திலேயே பயின்றுவருகின்றனர். 1908-ம் ஆண்டுக்குமுன் யாழ்ப்பாணத்திலுள்ள அர்ச். மாட்டினின் சின்னக்குருமடத்திலேயே அவர்கள் தங்கள்படிப்புக்களை முடித்தார்கள்.

1914-ம் ஆண்டு முதலாவது உலக யுத்தங் காரணமாகக் குருமடத்துப் போசிரியர்களான ஐரோப்பிய குருமார்தத்தம் நாடுகளுக்குச் சேவை செய்யப் போக நேர்ந்தமையால் சில ஆண்டுகளாகச் சொற்பபேரே குருப்பட்டம்பெற்றனர். ஆனல், 1923-ம் ஆண்டு ஆவணிக்கும், 1933-ம் ஆண்டுக்குமிடையில் இந்தக்குருமடம் அறுவடைக்கு அநேகஆட்களை அனுப்பும் சலாக்கியம்பெற்றது. இந்தக்குருமடத்தின் காலக்கிரமச சரித்திரததில் இவ்வாண்டுகள் ஓர்தனிச்சிறப்பு வாய்ந்தனவாய் இருக்கின்றனவென்று சொலலத் தக்கவிதமாய் அது 49 சுதேசகுருமாரைக் கண்டுகளித்தது. இவர்களில் மூவர் பிந்தஇலங்கைக் கததோலிக்க சமூகத்தின் தலைவர்களாகத் தெரியப்பெற்ருர்கள். இவர்கள் முறையே மகாவந். எட்மன் பீரிஸ் ஆண்டவர், சிலாப மேற்றிராணியார்; மகா மேன்மைதங்கிய தோமஸ்கூறே ஆண்டவர், கொழும்பு அதிமேற்றிராணியார்; மகாவந். ஜெருேம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர், யாழ்ப்பாணமேற்றிராணியார்.



அர்ச். பேனுட்டின் பரவசநிலை

இம்மேற்றிராசன குருமடம் தொடங்கியகாலந்தொட்டு மேற்றிராசன குருமாணவர்களுடன் ஒருங்கேசீவித்துப் படித்துவந்த அமலோற்பவிசபைக் குருமாணவர்கள் 1934-ம் ஆண்டு வைகாசி முதற்தேதியன்று தங்களுக்கென ஓர் இல்லத்தைத் தெரிந்து கொண்டார்கள். அன்றுதொட்டு அவர்கள் 1947-ம் ஆண்டுவரைக் குருத்துவபடிப்புகளுக்கே அர்ச். பேனுட் குருமடத்துக்குச் சென்ருர்கள். 1947-ம் ஆண்டு மேற்றிராசன குருமாணவர்களும், அதேபோன்று அமலோற்பவிசபைக் குருமாணவர்களும் அவரவர் அந்தஸ்திற்குத் தகுந்தவிதமாய் ஏற்ற பயிற்சி நன்குபெறத் தக்கதாய் வேருக்கப்பட்டார்கள். இற்றைவரை இக்குருமடம் கொழும்பு அதிமேற்றிராசனத்திலும், சிலாபமேற்றிராசனததிலும 205 குருமாரையும்,

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)



கொழும்பிலே பொறளையிலுள்ள அர்ச். பேனுட்டின் குருமடம்

# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

அருமைத் தம்பிமார்களே!

சென்ற ஆடி 30-ந் திகதி வெளிவந்த பாதுகாவலனின் "பாலர்பக்க"த்திலே "செமனெறி"யில் — அதாவது 'குருமடத்தில் ஓர்நாள்' என்னும் தலையங்கத்தைக் கொண்ட சிறுகட்டுரையை வாசித்து மகிழ்ந்திருப்பீர்கள். அதை நீங்கள் வாசித்தபின்பு அறுப்புக்கு அநேகம் வேலையாட்களை அனுப்புமாறு ஆண்டவரை மன்றாடத் தொடங்கியிருப்பீர்களென நம்புகிறேன். அத்துடன் நில்லாது உங்களில் அநேகர் ஓர்குருவாக வரவும் நினைத்திருக்கக் கூடும். உங்கள் செபதபங்கள் மூலம் எமது செல்வ நாட்டில் திவ்விய யேசுவின் ஞான ஆட்சியை நிலைநிறுத்த நீங்களும் முன்வர வேண்டும்.

உங்களைப் போன்ற பேணுட் என்னும் ஆறுவயது நிரம்பிய ஓர் சிறுவன் செய்த நிரச்செயலைச் சொல்லுகிறேன் கேளுங்கள்:— ஒருநாள் பேணுட் தன்தாயுடன் கோவிலில் இருக்கும்போது, அவனுடைய தாய் மகனுக்குத் திவ்விய நற்கருணைப் பேழையைக் காட்டி: "இந்தப் பெட்டிக்குள் யேசுநாதர் மெய்யாகவே இருக்கிறார்" என்று கூறினாள். அப்போது பேணுட்: "அம்மா! அவர் அங்கே என்ன செய்கிறார்?" என்று கேட்டான்.—"நீ வந்து தம்மைச் சந்திக்க வேண்டும் என்று அங்கே உனக்காக அவர் காத்துக்கொண் டிருக்கிறார்; நீ அவரைச் சந்திப்பது அவருக்கு மிகவும் பிரியம்; நீ ஏதாவது கேட்டால் அவர் உனக்கு உடனே கொடுப்பார்" என்று தாய் சொன்னாள்.—"ஆனால், அம்மா! அவரை அங்கு இருக்கும்படி செய்தது யார்?" என்றான் சிறுவன்.—"குருவானவர்." — "குருவானவர் என்றால் யார்?"—"யேசுவை மோட்சத்திலிருந்து இந்தப் பீடத்திற்கு வரவழைக்கக் கூடிய வல்லமை உள்ளவர் குருவானவர்; யேசுவைத் தமது கையில் ஏந்திப் பிறருக்குத் தேவ நற்கருணையின் வழியாகக் கொடுக்க அதிகாரம் உள்ளவர்."

அன்று மாலை பேணுட் இராச் சாப்பாட்டுக்கு வரவில்லை. வீடு முழுவதும் தேடியும் காணவில்லை. பேணுட் எங்கே? கடைசியாகத் தாய் அவனைத் தேடிக் கொண்டு கோவிற் பக்கம் சென்றாள். கோவிற் கதவு கொஞ்சம் திறந்திருந்தது. அதன் வழியாக உள்ளே பார்க்க, பேணுட் பீடத்திற்குமுன் நின்றுகொண் டிருப்பதைக் கண்டாள். அவன் தனது சிறு கைகளைத், திவ்விய நற்கருணைப் பெட்டிக்கு எதிரே நீட்டி: "யேசுவே, நீர் இங்கே இருக்கிறீரா? நீர் இங்கே இருப்பதாக அம்மா சொல்லுகிறாள்; உம்மோடு பேச விரும்பியே வந்திருக்கிறேன்; உம்மிடம் ஓர்காரியம் கேட்கவேண்டும்" என்று சத்தமாய்ப் பேசிக்கொண் டிருந்தான். பதில் ஒன்றும் இல்லை. யேசு தூங்குகிறார் என்று நினைத்து, அவரை எழுப்ப எண்ணினான். அங்கும் இங்கும் பார்த்தான். பங்குக் குருவானவர் இருக்கும் நாற்காலி தென்பட்டது. கொஞ்சம் கனமான நாற்காலி. பிரயாசையோடு அதை இழுத்துக் கொண்டு போய்ப் பீடத்தின் பக்கத்தில் வைத்தான். இரண்டு தடவை நற்கருணைப் பெட்டியின் கதவுகளைத் தட்டினான். பின்னும் பதில் இல்லை. "என்ன, இன்னும் தூங்குகிறீரா? ஒரு காரியம் கேட்க வந்திருக்கிறேன்; என்னை ஒரு குருவானவராகச் செய்வீரா? உம்மை என்கையில் ஏந்தி மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும்; தோத்திரம் — நாளைக்கு வருவேன்......என்னை நீர் ஒரு குருவானவராகச் செய்ய வேண்டும்......" என்றான்.

அருமைத் தம்பிமார்களே! எங்கள் செல்வ நாட்டில் எத்தனை ஆயிரக் கணக்கான மக்கள் திவ்விய யேசுவை அறியாமல் இருக்கிறார்கள். இப் பரிதாப நிலையை நினைக்கும் பொழுது பேணுட் சொன்ன செபம் உங்கள் மனதில் வரவில்லையா? "யேசுவே, நான் ஓர் குருவானவர் ஆகும்படி செய்யும். ஆத்துமாக்களை இரட்சித்து மோட்சத்திற்குக் கூட்டிக் கொண்டு செல்வதற்கு என்னை ஒரு குருவாகும்படி செய்யும்" என்று ஏன் நீங்களும் வேண்டிக் கொள்ளக் கூடாது?

திவ்விய நற்கருணைப் பெட்டியில் இருந்து "நான் யாரை அனுப்புவேன்? யார் போவான்? யார் எனக்கு ஆத்துமங்களைக் கொடுப்பான்?" என்று சின்ன யேசு அழைக்கிறார். நீங்கள் கூறும் பதிலை அவர் எதிர்பார்த்துக் கொண் டிருக்கிறார். சகலத்தையும் விட்டுவிட்டுத் தங்களைத்தானே ஆத்தும இரட்சணிய அலுவலுக்குக் கையளிக்கும் தம்பிமார்களைக் கவலையோடு தேடிக் கொண் டிருக்கிறார். இப்போது தானே எழுந்து, யேசுவின் சேவைக்காக ஏன் உங்களைக் கையளிக்கக் கூடாது? "யேசுவே, இதோ! என்னை அனுப்பும்; நான் ஒரு குருவானவர் ஆவேன்; சகலரும் உம்மை அறியவும், சிநேகிக்கவும் செய்வேன்; என் வாழ்நாள் முழுவதையும் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலேயே செலவழிப்பேன்" என்று நீங்கள் சொன்னாலோ!



## அற்புத மாதாசுரூபம்

இன்றுமே ஆயிரக் கணக்கான மக்கள் ஸ்பெயினில் உள்ள பெரிய மலை ஒன்றைத் தரிசிக்கப் போகிறார்கள். இது மொன்செராத் மலை என அழைக்கப் படுகிறது. இது சரித்திரப் பிரசித்தி பெற்றது. அதற்குக் காரணம் ஓர் மாதா சுரூபமே. இந்தச் சுரூபத்தை அர்ச். லூக்காஸ் வெட்டினார் எனச் சிலர் சொல்வர். அர்ச். இராயப்பர் இதனைப் பார்சலோனா நகரின் மேற்றிராணியாருக்குக் கொடுத்தார்எனச் சொல்வர் வேறு சிலர். தேவமாதாவின் மகிமைக்காகக் கட்டப்பட்ட ஓர் கோவிலில் வெகு பூச்சியமாக இந்தச் சுரூபத்தைவைத்து நெடுங்காலம் வணங்கி வந்தனர். 717-ம் ஆண்டு அங்கே கிறீஸ்தவர்களுக்கு மிக நெருக்கடியான ஒரு காலமாய் இருந்தது. அஞ்ஞானிகள் தங்கள் நாட்டின்மேல் படையெடுக்க வந்திருக்கிறார்கள் என்று குருவானவரிடம்ஓடிச்சென்று அறிவித்தனர்.

அதனால், மாதாவின் திருச்சுரூபத்திக்கு அவர்களால் அபாயம் நேராதபடி அவருடன் அதனைத் தூக்கிக் கொண்டு அந்நாட்டில் உள்ள அதிகம் உயர்ந்த மொன்செராத் மலைக்குச் சென்றனர். அங்கே அதனைப் பத்திரமாய் ஒளித்து வைத்தனர். ஸ்பெயினை நெடுங்காலம் சத்துராதிகள் அடிப்படுத்தி இருந்தமையால் இந்தச் சுரூபத்தை எவருமே கவனியாது மறந்துவிட்டனர்.

163 வருடங்களுக்குப்பின் ஒருநாள் அந்த மலைச்சாரலில் இடையர்கள் இருவர் ஆடு மேய்த்துக் கொண்டு நின்றனர்.

"அதோ! பார்; பிரகாசமான ஒரு வெளிச்சம்" என்றான் அவர்களில் ஒருவன்.

"ஆம், நானும் ஒரு இன்பமான இராகம் பாடுவதைக் கேட்கிறேன்" என்றான் மற்றவன்.

இருவரும் குருவானவரிடம் சென்று இதுசெய்தியை அறிவித்தனர். அவர் உடனே அக்குகைக்குச் சென்றார். அங்கே வெளிச்சம் தெரிந்த இடத்தில் போய்ப் பார்த்தார். "150 வருடங்களுக்குமுன் ஒளித்து வைக்கப் பட்டிருந்த மாதாவின் சுரூபம்" எனப் பழைய எழுத்துகளிலே எழுதப்பட் டிருந்ததை வாசித்தார்.

"வாருங்கள், நாம் இதைத் தூக்கிக்கொண்டு பார்சலோனா பட்டணத்துக்குத் திரும்பக் கொண்டு போவோம் என்றார். பின்னர் தூக்கிக் கொண்டுஒடுக்கமான ஓர்சிறிய பாதையால் சென்றனர். செல்லும்போது இடைவழியிலே அச்சுரூபத்தைத் தூக்க ஒருவராலும் முடியவில்லை. அப்பாற் செல்வதை மாதா விரும்பவில்லைப் போலும். அதனால் அவ்விடத்திலேயே இருக்க விரும்புகிறா என்பதற்கு இது ஒரு அடையாளமாயிற்று. அதனால் அங்குதானே சுரூபத்தை வைப்போம் என்றார். குருவானவரால் அதிலே அவவின் மகிமைக்காக ஒருகோவில் கட்டி எழுப்பப் பட்டது. இன்றுவரை அநேகம் அதிசயங்களும், புதுமைகளும் அதிலே நடைபெறுகின்றன.

— எம். ஜே. எம்.



## முத்திப்பேறுபெற்ற கொலைபாதகன்

அர்ச். பேணுட் ஒருநாள் தியோபால்ட் என்னும் பிரபுவின் மனைக்குப் போய்க்கொண் டிருக்கையில் சிலசேவகர் கொடிய ஓர் கொலைஞனைத் தூக்கில் இடுவதற்கு அழைத்துச் சென்றனர். அனுதாபம் மேலிட்ட பேணுட் சேவகரைப் பார்த்து: "இந்தக்கொலைஞனை என்னிடம் விட்டுவிடுங்கள்; நான் எனது கையால் அவனைத் தண்டிப்பேன்" என்று பரிந்து பேசினார். அப்போது தியோபால்ட் பிரபு அவ்விடம்வந்து: "பரிசுத்தரே, ஆயிரம்தரம் தூக்கிலிட வேண்டிய இக்கொடிய பாதகனையா நீங்கள் காப்பாற்ற எத்தனிக்கிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

அப்போது பேணுட் சொல்லுவார்: "இவனுக்கு மரண தண்டனை கட்டாயம் தகும்; அவனைத் தப்புவிப்பது எனது நோக்கமல்ல; ஆனால், அவன் சீவபரியந்தம் கடும் தபசீவியம் நடத்தச் செய்வேன்" என்று அவனைத் தனது ஆச்சிரமத்திற்குக் கொண்டு சென்றார். சிலதினங்களுள் அவன் உத்தம மனஸ்தாபப்பட்டுக் கொன்ஸ்ரான்ஸ் என்னும் பெயருடன் ஓர் சந்நியாசி யானான். முப்பது வருடங்கள் கடின தபசு செய்து எல்லோருக்கும் முன்மாதிரிகையாகச் சீவித்து நல்லமரணம் அடைந்தார். இவருக்குத் திருச்சபையால் முத்திப்பேறுபெற்ற பட்டம் அருளப்பட்டிருக்கிறது.

எவ்வளவு பெரியபாவிகளாய் இருந்தாலும் உத்தம மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பினால் அர்ச்சியசிஷ்டர்களாய் வரமுடியும் என்பதை இந்தச் சம்பவத்தினால் அறிந்துகொள்ள முடியும் அல்லவா?

## தங்கக்குடம்

முன்னோர் காலத்திலே ஓர் நாட்டில் சுத்த வீரனான ஓர் அரசன் இருந்தான். பிரசைகள் எல்லோரும் அவனைப் பெரிதும் மதித்து, நேசித்து வந்தார்கள். அரசனுக்கு ஒருகவலை மாத்திரம் இருந்தது. தனக்கு வயது போகப்போகத் தன்னுடைய தலைமயிர் நரைத்து வருவதுதான் அவன் கொண்ட கவலைக்குக் காரணம். அதனால் தினமும் அதை வர்ணம் தீட்டிக் கருமையாக்கி வருவான். தான் என்றும் ஓர் வாலிபனைப்போல் காணப்பட வேண்டும் என்பதே அவன் கொண்ட ஆசையாகும். அதையிட்டுத் தனது நாட்டில் தலைநரைத்த வயோதிபரையே தான் காணக்கூடாதென நினைத்து, எவராவது இருந்தால் அவர்களின் சிரசை வெட்டிவிட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தான். இதைக் கேள்விப் பட்டதே எத்தனையோ பெண்களும், பிள்ளைகளும் ஆறாத் துயர் கொண்டு விலைபெற்ற ஆடைஆபரணங்களை அரசன்முன் வைத்துத் தங்கள் வயோதிக பெற்றாருக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படியாக அவனை இரந்துநின்றார்கள். அரசனும்மனம்இரங்கி முந்திய கட்டளைக்குப் பதில் மற்றோர் கட்டளையைப் பிறப்பித்தான்.

அதாவது, அரசமாளிகையின் தென்புறமாக இருக்கும் அரசமரத்தின் அருகில்உள்ளகுளத்தின்நடுவிலேஓர் தங்கக்குடம் இருப்பதாகவும், எந்த வாலிபன் அதை எடுத்துக் கொண்டு வருகிறானோ அவனுக்கு அந்தக் குடத்தைப் பரிசாகக் கொடுத்து, நரைமயிர்கொண்ட

(அடுத்த பக்கம் பார்க்க)



# சுதேச வர்த்தமானம்

## எட்டாம்நூற்றண்டுவிழா

அர்ச். பேனுட் பாமபதமடைந்தஎட்டாம் நூற்றாண்டுவிழா இம்மாதம் 20-ந் திகதியாகிய இன்றுதினமாகும். இவர் சீர்கெட்டிருந்த சந்நியாசசீவியத்துக்குப் புத்துயிரளித்து அதனை ஓர் உன்னதநிலைக்குக் கொண்டுவந்த ஓர் சிஸ்ரேசியன் ஆசீர்வாதப்பர்சபை மடாதிபர். பதினொராம்நூற்றாண்டின் குரலொலி என்னும் சிறப்புப்பெயர்கொண்டும் இவர் அழைக்கப்பட்டுவந்தார். கிறீஸ்தவஉலகின் ஓர் உயிர்நாடியாய் விளங்கியிருந்து திருச்சபைக்கு மகத்தான சேவைகள் ஆற்றியிருக்கின்றார். இவரைப்பற்றியவிபரங்களை இன்றையகாவலனில் கண்டுகொள்ளலாம். கொழும்பிலுள்ள அர்ச். பேனுட்குருமடத்தைச் சேர்ந்த மாணவர்களால் இம்மாதம் 20-ம், 31-ம் திகதிகளில் இவரதுநூற்றாண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கின்றது. இவ்விழாவைபவங்களிலே இந்தக்குருமடத்துப் பழைய மாணவர்களாகிய சுதேசகுருமாரும், மேற்றிராணிமாரும் கலந்துகொள்ளுவார்களென அறிகின்றோம்.

## பண்டத்தரிப்பு – பாத்திமாகிரி

பண்டத்தரிப்பு— பாத்திமாகிரியிலே மாசில்லாத இருதயமாதா திருநாள் இம்மாசம் 22-ந் திகதி சனிக்கிழமை திரிதின ஆராதனையுடன் கொண்டாடப்படும். இதுவே பாத்திமாக்ஷேத்திரத்தின் நாமதேயங்கொண்ட பெருநாள். அன்றுசாயந்தரம் மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரத்துடன் திருநாள்முடிவாகும்.

## மானிப்பாய் ஆஸ்பத்திரி

தென்னிந்தியாவிலே கடப்பைப்பிரிவிலுள்ள ஜம்மலமடுகு எனுமிடத்தில் உள்ள லண்டன்மிஷன் வைத்தியசாலைத் தலைவராயிருந்தவரும், இங்கிலாந்திலே 18மாதகாலம் பயிற்சிபெற்றுக் கண்வைத்தியநிபுணராகத்திரும்பிவந்து இந்தியாவிலே பொதுச்சத்திர வைத்தியம், கண்சத்திரவைத்தியம், நோயாளரைப் பார்வையிட்டு மருந்துகொடுக்கும்வைத்தியம் ஆதியவற்றில் 28வருட வைத்திய அனுபவமுடையவருமான டக்றர் ஈ. பி. அசாறியா அவர்கள் வருகிற புரட்டாசிமாதமுதல் மானிப்பாயிலுள்ள கிறீன் ஆஸ்பத்திரியில் வைத்திய சேவையாற்றவிருக்கிறாரெனத் தெரியவருகிறது.

## மந்திரியார் கூறுகின்றார்

"தற்போதைய அரசாங்கம் தனது ஒழுங்குமுறையான வாழ்க்கையை அடுத்த நான்குவருடங்களிலும் தொடர்ந்துநடத்திக் கொண்டேபோகும்; தனதுகொள்கையைத் தொடர்ந்து நிர்வகித்து நடத்துவதிலிருந்து அரசாங்கத்தை எவ்வளவு பெரும்காடைத்தனமும் இடையிலே தடுத்துக்கொள்ள முடியாது; தற்போதுள்ளநிலைமையை அரசாங்கம் வெற்றிகரமாகச் சரிப்படுத்திவைக்கும்; கொழும்பிலே நிலைமை சரியாகிவிட்டது; அங்கலாய்க்கத் தேவையில்லை" என்று போக்குவரத்து மந்திரியாரான சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் திரிகோணமலையிலே சென்றஞாயிற்றுக்கிழமை தமக்கு அளிக்கப்பட்ட ஓர் வரவேற்பின்போது பேசலாயினர்.

## ஆகாயப்பந்தையப் பயிற்சி

ஆஸ்திறேலிய றோயல்ஆகாயப்படையைச்சேர்ந்த டி. ஆர். கம்மிங், ஆர். ஜே. அற்கின்சன், சி. ஜே. ஹார்வே எனும்மூவர் வருகிற ஐப்பசிமாதம் நியூசிலாந்திலிருந்து லண்டன்வரையிலே நடந்தேறவிருக்கின்ற ஆகாயப்பந்தையப் பயிற்சிநிமித்தமாகச் சென்றவியாழக்கிழமை காலை மெல்போண்நகரிலிருந்து கன்பெறா ஜெற் வெடிகுண்டு விமானமொன்றில் புறப்பட்டு, 2,040 மைல் பறந்து டார்வின்நகரை அடைந்து மத்தியானப்போசனம் உண்டு, அதன்மேல் அங்கிருந்து புறப்பட்டு 2,092 மைல்பறந்து சிங்கப்பூரை அடைந்து அங்கே பிற்பகற் சிறுபோசனம் உண்டு, அதன்மேல் 1,692மைல் பறந்து கொழும்பை அடைந்து மாலை தேநீர் அருந்தினார்கள். இவர்களின் விமானம் கொழும்பிலிருந்து ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டு வந்தவழியே திரும்பிச் சிங்கப்பூர், குயீன்சிலாந்து கண்டு நியூசிலாந்துபோய்ச் சேரலாயிற்று. இது கொழும்பிலிருந்து திரும்பிச் சென்றபோது தஸ்மான்கடலை 2 மணித்தியாலம் 30 நிமிஷத்தில் கடந்து — அதாவது மணித்தியாலம் சராசரிவேகமாக 620 மைல் வீதம் பறந்துசென்றுகடந்து நியூசிலாந்தைச் சேரலாயிற்று. தஸ்மான்கடல் ஆஸ்திறேலியாவிற்கும், நியூசிலாந்திற்குமிடையிலுள்ளது.

## டக்றர் ஈ. ரீ. புவெல்

மானிப்பாயிலுள்ள கிறீன்ஞாபக ஆஸ்பத்திரியினதும், இணுவிலிலுள்ள மைக்லியட் ஆஸ்பத்திரியினதும் தலைவராயிருந்து பலராலும் நன்கறியப்பெற்றவரான டக்றர் ஈ. ரீ. புவெல்அவர்கள் இம்மாசவிழுதியிலே இளைப்பாறவிருக்கின்றார். கிறீன் ஆஸ்பத்திரியிலே இவர் 27 வருடம் வைத்தியசேவை ஆற்றியிருக்கின்றார். 1945-ம் ஆண்டுமுதல் இருஆஸ்பத்திரிகளினதும் தலைவராக இருந்துவருகின்றார். இவர் டக்றராயும், தலைவராயுமிருந்து ஆற்றியமகத்தானதொண்டுகளாலே இவர்காலத்தில் இருஆஸ்பத்திரிகளும் மிகுந்த விருத்தியடைந்திருக்கின்றன. மானிப்பாய் ஆஸ்பத்திரியிலுள்ள நூற்றாண்டு விழாக் கட்டடம் இவரின் அருஞ் சேவைகளுக்கெல்லாம் முடிசூட்டியது போன்ற ஓர்ஞாபகசின்னமாகத் திகழுமெனலாம்.

## இத்தாலிய அரிசி

இத்தாலி சென்றவருடம் இலங்கைக்குப் 15,000 தொன் அரிசி உதவ முன்வந்தது. ஆனால், இதன்விலை டலராகக்கொடுபட வேண்டுமென்று இத்தாலியஅரசாங்கம் நிறுத்திப்பிடித்தமையாலே அது கைகடந்துபோய்விட்டது. தற்போதோ அது தான்உதவும் அரிசியின்விலையை ஸ்ரேர்லிங்காக ஏற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறது. அதனால்ஒரு பெருந் தொகையான இத்தாலிய அரிசியை அரசாங்கம்ஏற்றுக் கொள்ளும்போல் இருக்கிறது. பாகிஸ்தான் உதவ முன் வந்திருக்கும் அரிசியைப்பற்றியும் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

## சிகறெற் புகையிலைச்செய்கை

அரசாங்க கூட்டுறவுப்பகுதியானது கமத்தொழிற்பகுதியின் உதவியைப் பெற்று யாழ்ப்பாணத்திலே கூட்டுறவுச் சிகறெற்புகையிலை உற்பத்திசெய்வாரின் நான்குசங்கங்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இந்தநான்குசங்கங்களும் உடுவில், தெல்லிப்பழை, வேம்பிராய், நீர்வேலிஎனும் நான்கு கிராமங்களிலும் செயலாற்றிவரும். கொழும்பிலே சிகறெற்செய்யும் இருகம்பெனிகள் பண்டகசாலைகளை அமைப்பதற்கும், விறகு வாங்கிக்கொள்வதற்குமாக முற்பணங் கொடுத்துதவ முனவந்திருக்கின்றன. நான்குஇடங்களிலும் புகையிலை உணர்த்துவதை மேற்பார்வையிடுதற்கென்று பயிற்சிபெற்ற உணர்த்துக்காரரை அமர்த்தித்தரவும், கமத்தொழிற்பகுதியாலே குறிக்கப்படும் விலைகொடுத்து நான்குஇடங்களிலும் புகையிலை முழுவதையும் வாங்கவும் சம்மதித்திருக்கின்றன. மொத்தமாக 200 ஏக்கர்வரையிலே சிகறெற்புகையிலைச் செய்கை நடைபெறவிருக்கின்றது.

## பாலர்பக்கத் தொடர்ச்சி

### தங்கக்குடம்

அவனுடைய தகப்பனையும் உயிர்தப்ப வைப்பதாகவும், எவனாவது அதை எடுக்க முயன்று குளத்தில் குதித்தபின் அதை எடுத்துவராவிடின் அவனைக் கொலை செய்வதாகவும் தெரிவித்தான். இதை அறியவந்த எத்தனையோ வாலிபர்கள் குளத்தைப் போய்ப் பார்த்துத் தங்கக்குடம அதன் நடுவில் இருப்பதைக் கண்டு அதை எடுக்க முயன்று அதிலே குதித்தார்கள். ஆனால் தண்ணீரில் குதித்ததும் குடம் காணாமல் போய்விடும். இவ்விதம் 99 வாலிபர்கள் குதித்தனர். ஆனால், தங்கக் குடத்தைக் காணாது தவித்தனர். அப்போது ஒஸ்மின்என்ற ஓர்வாலிபன் தன் வயோதிக தகப்பனைக் காட்டில் மறைத்து வைத்து உணவு கொடுத்துப் பாதுகாத்து வந்தான்.

ஓர்நாள் அவன் தகப்பனுக்கு உணவு கொண்டு சென்றபோது அவனுடைய முகம் வாடியிருக்கக் கண்டு, "மகனே! இன்று ஏன் கவலை கொண்டவனாய்க் காணப்படுகிறாய்? தினமும் என்னை வந்து பார்ப்பதாலும், எனக்கு உணவு கொண்டுவந்து கொடுப்பதாலும் உனக்குக் கஷ்டம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

அதற்கு மகன்: "அப்பா! நான் தினமும் தங்களை வந்து பார்ப்பதும், தங்களுக்கு உணவு கொண்டு வந்து கொடுப்பதும் எனக்குச் சந்தோஷம் தான்; ஆனால், அரசன் பிறப்பித்த கட்டளையை நினைத்துத்தான் கவலைப்படுகிறேன்" என்றான்.

அரசகட்டளையை அறிந்துகொண்ட தகப்பன்: "மகனே! வருத்தப்படாதே; அந்தக் குளத்தின் அருகில் அரசமரம் ஒன்று இருக்கிறது அல்லவா? நீ சென்று அந்த மரத்தின் உச்சியில் ஏறிப்பார்த்தால் தங்கக்குடம் இருப்பதைக் காண்பாய்; குளத்தண்ணீரில் காணப்படுவது அதன் சாயல்மட்டுந்தான் என்றான்.

மகன் உடனே அரசனிடம் சென்று தான் அந்தத் தங்கக்குடத்தை எடுத்து வருவதாகக் கூறினான். அதற்கு அரசன்: "இங்கு 99 வாலிபர் அதை எடுக்கமுயன்று தலையைக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கின்றனர். நீயும் சேர்ந்தால் 100 பேர்" என்றான். அதற்கென்ன என்று ஒஸ்மின் குளக்கரைக்குச் சென்றான். அங்கு பல்லாயிரமக்கள் பார்த்துநிற்க, அஞ்சாது மரத்தில் ஏறி அங்குமிங்கும் பார்த்தபோது உச்சியில் தங்கக்குடம் இருக்கக் கண்டான். உடனே அதை எடுத்துச் சென்று அரசனிடம் காட்டினான். அரசன்மகிழ்ந்து: "மரத்தின் உச்சியில் அது இருந்ததை நீ எப்படி அறிந்தாய்?" என்று கேட்டான். என் தகப்பனார் அதைச்சொல்லித் தந்தார் என்றான் ஒஸ்மின். அரசன் சந்தோஷப்பட்டுத் தகப்பனை அழைப்பித்து அவனுக்கு மந்திரிபதவி கொடுத்து வயோதிகர்களுக்குத்தான் நல்லஅறிவு இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டான்.

ரீ. எஸ். கோமஸ்
அர்ச். மரியநாயகி கல்லூரி
மத்துகம



## பொறளையில் காட்சியளிக்கும் குருமடம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணமேற்றிராணத்தில் 53 குருமாரையும் தனது பழையமாணவர்களாகக் கொண்டுள்ளது. எனவே, இவர்களும் தங்கள் பழையகுருமடத்தின் பாதுகாவலரது 8-ம் நூற்றாண்டுவிழாவை இக்குருமடத்திலே வருகிற 31-ந் திகதி கொண்டாடவிருக்கிறார்கள். இதுவே இக்குருமடத்தின் மிகக்குறுகிய சரிதையாகும்.

அன்றொருநாள் தம்மைப் பின்தொடர்ந்துவந்த ஓர்பெரிய சனக்கூட்டத்தைப்பார்த்து எம்இரட்சகர், "அறுவடை அதிகமாயிருக்கிறது; ஆனால், வேலையாட்களோ சொற்பம்" என்று சொன்னசொற்கள்தான் இச்சந்தர்ப்பத்திலே ஞாபகத்துக்கு வருகின்றன. யேசுக்கிறீஸ்துநாதர் சனக்கும்பலைக் கண்டு, "அவர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகள்போல் அலைக்கழிக்கப்படுகிறார்கள்" என்று அவர்கள்மேல் மனமிரங்கினார் எனச் சுவிசேஷத்தில் வாசிக்கிறோம். ஆம், இடையன் இல்லாவிட்டால் ஆடுகளை மேய்ப்பதுயார்? ஓநாய்களிடமிருந்து அவைகளைக் காப்பாற்றுவது யார்? மேய்ப்பனில்லாவிட்டால் ஆடுகள்உதவியற்றுத் துன்புற்றுச்சாகுமே! குருமார்தான் ஆத்தும மேய்ப்பர்கள். குருமாரில்லாவிட்டால் மக்களுக்கு மோட்சவழியைக் காட்டக்கூடியவர்கள் யார்? அவர்களை அர்ச்சியசிஷ்டர்கள் ஆக்குவது யார்? சத்தியவேதத்தைப் பிறமதஸ்ருக்குப் போதிப்பது யார்? பிள்ளைகளுக்கு ஞானஸ்நானமும், வியாதிக்காரருக்கு அவஸ்தைப்பூசுதலும் கொடுப்பதுயார்? எங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு அடைந்து திவ்விய சற்பிரசாதத்தை எவ்விதம் உட்கொள்வோம்? குருவானவர் இல்லையா, திவ்விய பூசையும் இல்லை; திவ்வியநற்கருணையும் இல்லை; இரட்சணியமும் இல்லை; மோட்சமும் இல்லை.

இப்படியான குருமாரை—மற்றோர் கிறீஸ்துவைப் பயிற்சியளித்து எம்மிடையே அனுப்பியுள்ள அர்ச். பேனாட் குருமடம், தனது பாதுகாவலர் பரமபதமடைந்த 8-ம் நூற்றாண்டுவிழாவைக் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்திலே இன்னும் அநேகவாலிபர்களைத் தன்னகத்தே அழைக்க விரும்புகிறது. பெற்றோரே! உங்கள்பிள்ளைகளில் ஒருவரையெனினும் இவ்வுன்னத அலுவலுக்கு அழைக்குமாறு அனுதினம் மன்றாடிவாருங்கள்.

வாலிபர்களே! எமதுநாட்டிலுள்ள 80 லட்சம்பேரில் 8 லட்சம்பேரே கத்தோலிக்கர். ஏனையோர் மேய்ப்பனற்ற ஆடுகள்போல் இருந்துவருகின்றனர். இவர்கள்மேல் இரக்கம்வையுங்கள். நீங்கள்தான் இவர்களுக்கு மேய்ப்பர்களாகவேண்டும். இவர்களுக்குக் குருமாராயிருந்து, பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இவர்களை இரட்சிக்கவேண்டியவர்கள் நீங்களே. சத்தியவேதத்தை இவர்களுக்கு அறிவித்து அவர்களை மோட்சத்துக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டியவர்கள் நீங்களே. அர்ச். பேனாட்டின் ஆத்துமவாஞ்சையும், அவரின்மன்றாட்டுக்களும் உங்களை இவ்வுன்னத அலுவலில் பங்குபற்றச்செய்ய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக! சுபம்!!

---

யாழ்ப்பாணம்

### அர்ச். ஆரோக்கியநாதர் திருநாள்

இத்திருநாள் கொண்டாட்டம் நிகழும் ஆவணிமாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 27-ந் திகதி வியாழக்கிழமை முடிவாகும்.

**P. T. ஜேம்ஸ், O. M. I.**
கட்டளைக்குரவர்

## தேம்பாவணியும் செபமாலையும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கபிரியேற் சம்மனசானவர் மரியாயின்பெருமைகளை நன்குஅறிந்தவர். முன்னரும் கன்னிகையிடத்தில் மணத்தூதாகவந்தவர். அந்தச்சமயத்திலே கன்னிகையின் பெருமைகளை எல்லாம் தேவன் அவரிடத்திற் கூறியிருந்தார். அதனால் இந்தஒருசிறியபாட்டில்தேவதாயின் பெருமைகளையெல்லாம் மிகவும் சாதுரியமாகத் தொகுத்தடக்கித் தந்திருக்கிறார். அவர் மூன்றுவகையான பெருமைகளை எடுத்துக்கூறி மூன்றுமுறை வாழ்த்துகிறார். ஒன்று, தேவவரங்களால் நிரம்பியிருந்தது. அதாவது, உற்பவிக்கும்பொழுதே மரியம்மாளைச் சர்வேசுரன் சென்மபாவமில்லாமல் உற்பவிக்கச் செய்ததுமன்றிப் பரிசுத்தமானமனமும், அறிவும், தெளிந்தகாட்சியும், வல்லமையும், கருணையும், தெளிவும், ஆராய்ச்சியும் ஆகியவரங்களைக் கொடுத்துமிருந்தார். அடுத்தபெருமை, நாதனை அடைந்து வாழும் நெஞ்சத்தாளாய் இருந்தது; எவ்வாறெனில், மரியம்மாள் மூன்றுவயதாக இருக்கும்போதே கோவிலில் சேர்ந்து, நித்தியகாலமும் கன்னிகையாயிருந்து தொண்டுசெய்வேன் என்று சர்வேசுரனுக்கு வார்த்தைப்பாடு கொடுத்து, தேவனது அடியவளாக இருந்துவந்தாள். மூன்றாவது பெருமை, ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. தேவகுமாரனைப் பெற்றெடுக்கப் பாக்கியம்பெற்ற பெருமையை முனிவர் இதனாற் குறிப்பிடுகின்றார். மற்றளந்த மாதருக்கும் கிட்டாத தேவமாதாஎன்னும் மகிமையை அவள் பெற்றதனால் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவளானாள்.

கபிரியேற் சம்மனசானவரின் இந்த வாழ்த்துரையையே திருச்சபையும் தேவதாயாரைக்குறித்துச் சொல்லிவரும் பிரியதத்தமந்திரத்தின் வாழ்த்துரைப்பகுதியிற் சேர்த்திருக்கிறது. அது மோட்சத்திலிருந்துவந்த வாழ்த்துரை அல்லவா! சம்மனசானவர் வாழ்த்தியதுபோல நாமும்மாதாவை வாழ்த்துவோமாக!

---

அர்ச். பிரான்சீஸ்துவின்

## மூன்றாஞ் சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 28-ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வேளை ஆறுசகோதர, சகோதரிகள் தமது நவாப்பியாசகாலத்தைத் தொடக்குவார்கள். புரட்டாசிமாதம் சகோதரர் பரிபூரணபலன் அடையக்கூடிய நாட்கள்:-- 1, 4, 8, 14, 17, 18, 24, 27, 29. பொதுப் பாவமன்னிப்பு அடையக்கூடிய நாட்கள்:— 8-ம் 17-ம் திகதிகள். கூட்டத்தின்பின் ஆலோசனைச்சங்கம் நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY
for Director

---

## நூற்றாண்டு ஞாபகமலர்

தேவனின் சுத்தவீரர் வழிகாட்டியான கிளாயுவே, அர்ச். பேனாட்டின் சீவியவரலாறு. அவரது திருமரணத்தின் எட்டாம்நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாக வண. மாட்டீன் குவேர், O. M. I. சுவாமியவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்றது. சீவியவரலாற்றுடன் சம்பந்தப்பட்ட பல அழகான படங்களைக் கொண்டது. விலை பிரதி சதம் **75.**

கிடைக்குமிடம்:
St. Bernard's Seminary,
Borella, Colombo.


# சிலோன்

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்

இலங்கையரின் முதலாவது
இன்ஷூரன்ஸ் கம்பெனி
முதன்மையாகவே இன்னும் விளங்குகிறது.

* * *

ஒவ்வொரு தேவையையும் பூர்த்தி
செய்யக்கூடிய போலிஸி!
ஒவ்வொருவரின் தேவைக்கும் தகுந்ததான
போலிஸி!



தலைமை ஆபீஸ்: 69, ராணி வீதி, கொழும்பு
டெலிபோன்: 6241, 6242, 6243.

கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| காலி | அம்பலாந்தோட்டை | | மட்டக்களப்பு |
| கண்டி | யாழ்ப்பாணம் | | சிலாபம் |
| களுத்துறை | நீர்கொழும்பு | | நுரேலியா |
| மாத்தறை | பதுளை | ரத்னபுரி | குருணாகலை |

மொத்த மூலதனம் 75 லட்சம் ரூபா

## தி சிலோன் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிட்.

கீழ்க்கண்ட இன்ஷூரன்கள் இயற்றப்படும்:
ஆயுள், தீ, மோட்டார், பொதுநஷ்டஈடு,
கப்பல்சேதம் முதலியன
சேவையின்மூலம் பாதுகாப்பளிப்பது.


## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

கடுமையானகாற்று ஒருபுறமும், கடுமையானவெயில் மறுபுறமுமாக ஊரின் சுகாதியத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றன. மழையுமில்லை மழைக்கோலமும் அதிகமில்லை.

### குருமார் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. குருப்பிரசாதிகளின் வருடாந்த முதற்பிரிவான ஞானஒடுக்கம் நேற்றுமாலை ஆரம்பமாயிற்று. 40 குருமார்வரையில் சமுகமளித்திருக்கின்றார்கள். வண. பி. திசநாயக சுவாமியவர்கள்வந்து ஞானஒடுக்க போதகஞ் செய்கின்றார்.

### பாத்திமா இல்லத் திறப்புவிழா

இளவாலையிலே, பத்தாவத்தைவாசரான திரு. சி. எஸ். நாயகம்அவர்கள் நவமாக அமைத்திருக்கும் பாத்திமா இல்லமானது, நாளைநின்றுவரும் 22-ந் திகதிசனிக்கிழமைகாலை 6-30 மணிக்கு ஆசீர்வதிக்கப்பெற்றுத் திறப்புவிழா நடந்தேறுமென்றும், அப்புதுமனையிலே போர்த்துக்கால்நாட்டிலிருந்து சமீபத்திலே தருவிக்கப்பெற்ற பாத்திமாநாயகியின் அழகிய திருச்சுரூபஸ்தாபக வைபவமும் அத்தாணம் நடைபெறுமென்றும் அறிகின்றேம். இரண்டடி உயரமான இத்திருச்சுரூபமும் இலங்கையிலே சிலவருடங்களின்முன் திருயாத்திரைசெய்து திரும்பிய பாத்திமாமாதா திருச்சுரூபத்தைச் செய்த அதே போரான்சிற்பியாலேயே செய்யப்பெற்றதெனத்தெரியவருகிறது.

### 'கணிதப்பூச்சி'பற்றிய குறிப்பு

பாதுகாவலனில் வெளிவரத் தொடங்கியிருக்கும் "கணிதப்பூச்சி"க்குரியவிடைகள் நான்குசதமுத்திரை ஒட்டித் திறந்ததபால்மூலம் அனுப்பப்படலாம்.

### வெள்ளிப்பதக்க சந்மானம்

தென்மராட்சிப்பகுதி மிருசுவில்—எழுதுமட்டுவாள் இறப்பு—பிறப்பு—விவாகப்பதிவுகாரராக 1917 ம்-ஆண்டு ஆடிமாதம்தொடக்கம் இற்றைவரையுமுள்ள 36 ஆண்டுகளாக ஆற்றிவந்திருக்கும் சிறந்தசேவைகாரணமாகத் திரு. என். எஸ். பிலுப்புப்பிள்ளை அவர்கள் மாட்சிமைதங்கிய 2-ம் எலிசபேத் மகாராணியாரின் பட்டாபிஷேக வெள்ளிப்பதக்கம் மேன்மைதங்கிய கவர்னர்—ஜெனறல் அவர்களால் சந்மானித்து மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறார் என அறிந்து சந்தோஷமானோம்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

சதாசகாயமாதா அருளிய அநேக பேருபகாரங்களுக்காக நன்றிதெரிவித்து இதனைப்பிரசுரஞ் செய்கின்றேன்.

ஓர் பக்தன்

* * *

பிறேக்நகரின் திருக்குழந்தையேசு அருளிய அநேகபேருபகாரங்களுக்காக நன்றி தெரிவித்து இதனைப் பிரசுரஞ்செய்கின்றேன்.

ஓர் பக்தன்

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 20-1953